# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 21வெள்ளிக்கிழமை (05-01-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:40


## பல்கலைக்கழக எழுச்சி நிகழ்வுகளுக்கு தமிழர் ஆசிரியர் சங்கம் பூரண ஆதரவு

யாழ்ப்பாணம்,ஜன.5

தமிழ்மக்களின் அபிலாசை சுய நிர்ணய உரிமையே என்பதையும், அரசு யுத்தத்தை நிறுத்திப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்தவேண்டும் என்பதையும் வலியுறுத்தி யாழ்பல்கலைக்கழக சமூகத்தினரால் நடத்தப்பட்டுவரும் எழுச்சி நிகழ்வுகளுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது.

யாழ்பல்கலைக்கழகத்தில் நேற்று மாலை நடைபெற்ற எழுச்சிக் கூட்டத்தில் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் எழுச்சி நிகழ்வுகளை ஆதரித்து உரையாற்றினார்.

"ஒவ்வொரு தமிழ்மகனும் தனது இனத்திற்கு அநீதி இழைக்கப்படுகின்றது என்பதை உணர்ந்து எழுச்சி

(14ஆம் பக்கம் பார்க்க)

## 1250 பயணிகளுடன் இன்று 'லங்கா முடித்த' புறப்படும்

யாழ்ப்பாணம்,ஜன.5

காங்கேசன்துறையில் இருந்து ஆயிரத்து 250 பயணிகளுடன் 'லங்கா முடித்த' கப்பல் இன்று திருகோணமலைக்குப் புறப்படவிருக்கின்றது.

இந்தக் கப்பலில் டிசெம்பர் 8 ஆம், 12ஆம் திகதிகளில் பயணம் செய்வதற்கான ஏற்கனவே பயணச் சீட்டுகளைப் பெற்றுக்கொண்டவர்களையும் -

நேற்றுப் பயணச்சீட்டுப் பெற்றவர்களையும் -

பயண ஏற்பாடுகளுடன் இன்று காலை 6 மணிக்கு யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள மணியம் கட்டடத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

# புலிகளின் போர் நிறுத்த அறிவிப்பை

# வரவேற்கின்றார் தூதர் சொல்ஹெய்ம்!

## உதயன் செய்தியாளரைத் தாக்கிய விஞ்ஞான பீட மாணவர் கும்பல்!

### பல்கலைக்கழக வளாகத்தினுள் அடாவடித்தனம்

யாழ்ப்பாணம்,ஜன.5

யாழ்பல்கலைக்கழகத்தில செய்தி சேகரிப்பதற்காகச் சென்ற 'உதயன்' பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளரை விஞ்ஞான பீட மாணவர்களின் கும்பல் ஒன்று சூழ்ந்துகொண்டு தாக்கியுள்ளது.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் விஞ்ஞானபீடப் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றது.

விஞ்ஞானபீட மாணவர் மன்றத் தலைவரை சம்பந்தப்பட்ட செய்தியாளர் சந்தித்து, அவரது கருத்துக்களைக் கேட்டுத் தமது குறிப்புப் புத்தகத்தில் பதிவுசெய்து கொண்டிருந்தபோது திடீரென அங்கு திரண்டு வந்த கும்பல் ஒன்று செய்தியாளரைச் சூழ்ந்துகொண்டது. விஞ்ஞான பீட மாணவர்மன்றத் தலைவர் எடுத்துக் கூறியும், அதனைக் கேட்காமல், செய்தியாளரின் சைக்கிளைப் பறித்து வீசியது கும்பல்.

செய்தியாளரைச் சூழ்ந்துகொண்ட மாணவர்களில் சிலர் அவரைப் பிடித்தவாறு "ஆளைக் கட்டிவையுங்கோடா!", "அடித்துக் கொல்லுங்கோடா!" என்று கத்திக் கூச்சலிட்டனர். அவரைக் கேவலமாக நடத்தி அச்சுறுத்தினர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## கண்டனம் தெரிவிக்கிறது பத்திரிகையாளர் சங்கம்

யாழ்ப்பாணம்,ஜன.5

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்றைய தினம் பத்திரிகையாளர் ஒருவரை சில மாணவர்கள் தாக்கிய சம்பவத்தை வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் செ.கதிர்காமத்தம்பி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இச் சம்பவம் உணர்ச்சிக் கொந்தளிப்பின் காரணமாகவே இடம்பெற்றதாக யாழ்ப்பாணப் பத்திரிகையாளர் சமூகம் கருதுகின்றது. இப்படியான துர்சம்பவம் இந்த மண்ணில் இந்த வேளை இடம்பெற்றிருப்பது வேதனைக்குரியதாகும்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஒரு புறத்தில் மாணவர்கள் நாட்டில் அமைதி, சமாதானம் நிலவ வேண்டுமென்று எழுச்சி நிகழ்வுகளை மேற்கொண்டிருக்கும் இவ்வேளையில் மாணவர்களில் ஒரு சிலர் பத்திரிகையாளர்களுக்கு எதிராக மனதைத் துன்புறுத்தும் அமைதியற்ற செயல்களில் ஈடுபட்டது வேதனைக்குரியது.

எழுது முன்னாள் செயலாளர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டதை வன்மையாகக் கண்டித்த பல்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கிலிருந்தும் கண்டனம்

அம்பாறை, ஜன.5

'உதயன்' செய்தியாளர் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்துக் கிழக்கிலங்கை ஊடகவியலாளர் சங்கங்கள் அறிக்கை விடுத்துள்ளன.

தென் கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கப் பொதுச் செயலாளர் புகாது, கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கத் தலைவர் ஏ.எல்.எம்.சலீம் ஆகியோரே கண்டன அறிக்கைகளை விடுத்துள்ளனர்.

"செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர் ஒருவர் தாக்கப்பட்ட அநாகரிகமான சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

"பத்திரிகையாளர்களை அணைத்து வரவேற்கவேண்டிய பல்கலைக்கழகத்தின் மாணவர் சமூகம் இப்படி நடப்பது கண்டிக்கப்பட வேண்டியதொன்று மட்டுமல்ல சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட வேண்டிய விடயமும் ஆகும்.

"மாணவர்கள் உட்பட சமூகத்தின் அனைத்துத் தரப்பினரதும் உரிமைகளுக்காகவும் பல்கலைக்கழக மாணவர்களைப் பீடித்துள்ள 'ராகிங்' கொடுமைக்கு எதிராகவும் குரல் கொடுக்கும் பத்திரிகையாளனைத் தாக்குவது வேதனைக்குரிய விடயமாகும்" இப்படி அந்த அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3-14)

## அரசு நிராகரித்தது குறித்து கருத்துக் கூறுவதற்கு மறுப்பு

லண்டன்,ஜனவரி5

**இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் சமாதான முயற்சிகளை மேற்கொண்டுவரும் நோர்வே நாட்டின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், விடுதலைப் புலிகளால் அறிவிக்கப்பட்ட ஒரு தலைப்பட்ச போர் நிறுத்த அறிவிப்பை தாம் வெகுவாக வரவேற்பதாகக் கூறியுள்ளார்.**

**லண்டன் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு (ரீ.பி.ஸிக்கு) அவர் நேற்று வழங்கிய நேரடிச் செவ்வி ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.**

புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பை நிராகரித்து, இது விடயத்தில் அசமந்தப் போக்குடன் ஸ்ரீலங்கா அரசு செயற்படுவதாகக் கூறப்படுவது குறித்து இச் செவ்வியில் கருத்துக் கேட்டபோது அவர் பதிலளிக்க மறுத்துவிட்டார்.

"போரில் ஈடுபடும் இரு தரப்பினரும், இலங்கையில் அன்றாடம் இடம பெறும் மனிதப் பேரழிவுகளையும் இழப்புகளையும் அவலங்களையும் கருத்தில் கொண்டு உடனடியாகப் பேச்சுவார்த்தை மேசைக்கு வர வேண்டும்" - என்று மற்றொரு கேள்

(14ஆம் பக்கம் பார்க்க)

## களுத்துறைச் சிறைச்சாலையில் தமிழ்க் கைதி மர்மக் கொலை!

கொழும்பு, ஜன.5

களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதி ஒருவர் மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்.

திருகோணமலையைச் சேர்ந்த சண்முகராசா நித்தியானந்தன் (வயது 24) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு கொல்லப்பட்டவராவார்.

சிறைச்சாலையின் 'சி' வார்ட்டில் உள்ள கழிவறை ஒன்றினுள் இவரது சடலம் நேற்றுக் காலை 6 மணியளவில் சிறை அதிகாரிகளால் கண்டு பிடிக்கப்பட்டது.

சிறைச்சாலையின் 3 ஆம் இலக்க 'சி' வார்ட்டிலேயே இவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இந்த வார்ட் சுமார் 50 அடி நீளமானது.

10 அறைகளைக் கொண்ட இந்த வார்ட்டின் இறுதிப் பகுதியில் உள்ள

(14ஆம் பக்கம் பார்க்க)

### பகிஷ்கரிப்பு கைவிடப்படும்?

'ராகிங்' சம்பவம் தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் இடைநிறுத்தம் செய்யப்பட்டதை அடுத்து யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர்கள் நடத்தி வரும் பகிஷ்கரிப்புப் போராட்டத்துக்கு நேற்று மாலையில் சுமுகத் தீர்வு காணப்படும் நிலை எட்டப்பட்டதாகவும் -

விஞ்ஞானபீட மாணவர்கள் பெரும்பாலும் இன்று விரிவுரைகளுக்குத் திரும்பும் சூழ்நிலையே காணப்படுவதாகவும் -

யாழ். பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதி ஒருவர் நேற்றிரவு தெரிவித்தார். சமரச ஏற்பாடு குறித்து உறுதிப் படுத்தப்பட்ட தகவல்கள் கிடைக்கவில்லை. (உ)

### சிதைந்த நிலையில் 10 சடலங்கள் ஒப்படைப்பு

நாவற்குழிப் பகுதியில் பதுங்கு குழி ஒன்றில் காணப்பட்டதாகத் தெரிவித்து சிதைந்த நிலையில் பத்து மனித சடலங்களைப் படையினர் நேற்றுமுன்தினம் இரவு யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

இந்தச் சடலங்கள் விசாரணைகளுக்காக யாழ்ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளன. (உ-3-10-15)

## மேலும் இரண்டு சிப்பாய்கள் அடையாளம் காட்டப்பட்டனர்

வடமராட்சி,ஜன.5

மிருசுவில் படுகொலைகள் தொடர்பாக இரண்டாவது நாளாக நேற்று இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் மேலும் இரு படையினர் அடையாளம் காட்டப்பட்டனர்.

பருத்தித்துறையில் இயங்கும் சாவகச்சேரி நீதிமன்றத்தில் பதில் நீதிவான் சு.கந்தசாமி முன்னிலையில் நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த அணிவகுப்பில் சாட்சியான பொன்னுத்துரை மகேஸ்வரன் இரு படையினரை அடையாளம் காட்டினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இரண்டாம் கட்டமாக கொடிகாமம் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு யாழ்.சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த ஆறு சிப்பாய்களும் நேற்றைய அணிவகுப்பில் நிறுத்தப்பட்டனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

### மிருசுவில் கொடூரத்தைக் கண்டித்து

## நாடாளுமன்றுக்கு கறுப்பு உடையுடன் செல்ல மகேஸ்வரன் எம்.பி. திட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.5

மிருசுவிலில் ஐந்து வயதுச் சிறுவன் உட்பட எட்டு அப்பாவிப் பொது மக்கள் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்ட சம்பவத்தைச் சர்வதேச உலகுக்கு எடுத்துக் காட்டும் விதத்திலும், இத்தகைய சம்பவங்களுக்கு பகிரங்க எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் -

எதிர்வரும் 10 ஆம் திகதி அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணைக்காக நாடாளுமன்றம் கூடும்போது யாழ்.மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் எம்.பிக்கள் அனைவரும்

(14ஆம் பக்கம் பார்க்க)

## திரு ரியூசன் சென்ரர்

**A/L 2003** கணித பிரிவு கோண்டாவில்

CO.MATHS - A.பத்மநாதன்
CHE. - T.மகேஸ்வரன்
PHY. - S.சோதிலிங்கம்

**ஆரம்பம்: 07.01.2001 (ஞாயிறு 3 மணி)**

அனுமதிகள் வழங்கப்படுகின்றன. (82556)


## கூட்டம்

ஆரம்பநெறி ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டோர் சங்க கூட்டம் ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர் கல்லூரியில் திங்கட்கிழமை (08.01.2001) காலை 10 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

- தலைவர்.

(82567)


## ஜிம்னாஸ்டிக் பயிற்சி வகுப்புக்கள்

புதிய மாணவர்களுக்கான ஜிம்னாஸ்டிக் பயிற்சி வகுப்புக்கள் நாளை (06.01.2001) சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.

இடம் : யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலயம் (ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்)

நேரம் : சனி, ஞாயிறு மாலை 4.00 மணி

தரம்மிக்க ஆசிரியர்களால் பயிற்சி அளிக்கப்படும். (C/14643)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலைகளின் அபிவிருத்திக்கு உழைக்கும்
Dr.வை.தியாகராசா J.P
அவர்களின் அன்பு மாமியார்

### திருமதி குமாரசாமி இராசம்மா

அமரராகிவிட்டார்

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கோப்பாய் அணியப் பாடசாலை அதிபர்கள்,
கோப்பாய்.

(82559)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கப் போஷகர்
Dr.வை.தியாகராசா J.P
அவர்களின் அன்பு மாமியார்

### திருமதி குமாரசாமி இராசம்மா

காலமாகிவிட்டார்

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

(82560)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
14 - 06 - 1927



மறைவு
04 - 01 - 2001

### திருமதி இராசம்மா குமாரசாமி

எமது வங்கியில் சக உத்தியோகத்தராகக் கடமையாற்றும்

**திரு. K. குணசிங்கம் அவர்களின்**

அன்புத் தாயார்

### திருமதி இராசம்மா குமாரசாமி

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கொமர்ஷல் வங்கி**

விளையாட்டுக்கழகம் சார்பாக
முகாமையாளர், உத்தியோகத்தர்கள்.

(C/14642)

## ரவைமா கிலோ ரூ.25

தென்மராட்சிப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களின் நலன்கருதி சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கத்தினால் ரவைமாவின் விலை கிலோ 25 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தற்போது வலிகாமம், வடமராட்சி ஆகிய பகுதிகளில் உள்ள சங்கத்தின் கிளைக் கடைகளில் ஒரு கிலோ ரவைமாவை 25 ரூபா விலையில் பெற்றுக்கொள்ளலாமென சங்கத் தலைவர் செ.சுப்பிரமணியம் தெரிவித்தார்.


## கணக்கீடு

திரு.பாலவாசன்
B.B.A. (F.M.Spl)

**A/L 2002**

கட்டுப்பாட்டுக்கணக்கு

ஆரம்பம்: 6.1.01 7 a.m.

விக்னா கல்வி நிறுவனம் (82538)

## NEWTON

342, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி)

*SPOKEN ENGLISH AND GRAMMAR*
*BY.BRITTO*

புதிய பிரிவு ஆரம்பம்:
06.01.2001 (நாளை)
Sat. 12 மணி (ப.நே.) (82555)

## A/L 2001 CHEMISTRY

*PAPER CLASS*
A.Mahadeva

ஆரம்பம்:
கணிதப் பிரிவு - சனி 2.00
உயிரியல் பிரிவு - புதன் 3.00

NeW Science Hall (82553)

மீண்டும் ஆரம்பம்

## SHAMROCK

* ஈச்சமோட்டை வீதியில் Gr.4 முதல் 8 வரை (மட்டும்)
06/1 சனி 8 a.m.
* சோமசுந்தரம் வீதியில் அனைத்து வகுப்புகளும் வழமை போல் நடைபெறும். (C/14648)

## நாகம்ஸ்

சுன்னாகம்

### டைட்டானிக்

(தமிழ் - நீல்ஸ்)

✪ டைட்டானிக் என்ற கப்பலுக்கு நடந்த பயங்கரம்.
✪ இது ஓர் உண்மைச் சம்பவம். இது ஓர் உண்மையான காதல் சம்பவம்.
✪ உலகில் உள்ள எந்தச் சக்திகளாலும் அவர்கள் இருவரையும் பிரிக்க முடியாது.

(82568)

காட்சி நேரங்களில் மாற்றம்
புதிய நேரம்: 10.30, பி.ப. 2.30.

## ராஜா யாழ்ப்பாணம்

விஜய், மோனிக்கா, ரம்பா,மணிவண்ணன்
மற்றும் பலரின்
வித்தியாசமான நடிப்பில்

### மின்சாரக்கண்ணா

காட்சிகள்: 10.30, 2.00 (பு.நே.) (C/14587)

## தேவை

**1) கணக்கு லிகிதர் (ACCOUNTS CLERK)**

யாழ். நகரலுள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனம் ஒன்றுக்கு ஆண் கணக்கு லிகிதர் (ACCOUNTS CLERK) தேவை. விண்ணப்பதாரிகள் க.பொ.த. (சாதாரணம்) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் ஆங்கில அறிவு உடையவராகவும் முன்அனுபவம் உடையவராகவும் ஐம்பது வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுதிகதி :- 15.01.2001**

விள.இல. 1171, மே/பா - உதயன் (82562)


## அவசரக் கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவத்துறை 3ஆம், 4ஆம் வருட மாணவர்களுக்கான அவசரக் கலந்துரையாடல் இன்று (05.01.2001) வெள்ளிக்கிழமை 11.00இற்கு முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

முகாமைத்துவ. மாணவர் மன்றம்
யா/பல்கலைக்கழகம்.

(82561)

## கண்ணீர் அஞ்சலி

### இராசையா சிவலிங்கம்

(முன்னாள் பிரதம முகாமையாளர் இல. வங்கி, யாழ். மேற்தரக்கிளை)

யாழ். மேற்தரக் கிளையின் முதல் பிரதம முகாமையாளரானீரே!
உம்பெயரால் அவ்வாசனத்தை அலங்கரித்தீரே!
அனைத்து ஊழியரிடமும் உம் அன்பைப் பகிர்ந்தீரே!
இன்று எம்மை எல்லாம் விட்டு இறைவன் பாதம் புகுந்தீரே!

அன்னாரின் பிரிவுத் துயரால் வாடும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*மானிப்பாய்.* (82548)

ஊழியர்கள்,
இலங்கை வங்கி.

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் ஆரம்பகால முன்னாள் அங்கத்தவரும்
யாழ்.கிளையைச் சேர்ந்த சத்தியா பேக்கரியின்
முன்னாள் உரிமையாளருமாகிய

**சவரிமுத்து கிறிஸ்தோப்பர்** (விஜயகுமார்)

அவர்களின் மரணச்செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

- யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்.

(C/14646)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நடராசா தவமணி

வேலணை 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வேலணை வங்களாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா. தவமணி நேற்று (04.01.2001) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் நடராசாவின் (டிஸ்கோ சலூன் - வேலணை) அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் வள்ளியம்மையின் அன்பு மகளும் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் சகோதரியும் மோகனதாஸ், குகதாஸ், தேவதாஸ், சிவதாஸ், கண்ணதாஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும் புஸ்பராணி, சகுந்தலாதேவி, அனித்தா ஆகியோரின் மாமியாரும் கோபிராஜ், உதயராஜ், தேனுஜா, புவிஜன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2001) வெள்ளிக்கிழமை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வங்களாவடி,*
*வேலணை.* (82550)

தகவல்:
வீ.நடராசா (கணவர்)

### சரவணமுத்து இராசேந்திரம்

சங்கானை இலகடியைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் பிரம்படியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து இராசேந்திரம் 03.01.2001 அன்று காலமானார்.

அன்னார் காலம் சென்ற சரவணமுத்து சின்னத்தங்கச்சியின் அன்பு மகனும் காலம் சென்றவர்களான பொன்னுத்துரை சிவசோதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும் ஞானரஞ்சிதத்தின் அன்புக் கணவரும் ரமேஸ், சுரேஸ் (U.K), ரஜனி (ஜேர்மனி), சதீஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் மதிசுதனின் (ஜேர்மனி) அன்பு மாமனாரும், காலஞ்சென்ற கந்சாமி மற்றும் சிவஞானவதி அழகேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் மனோரஞ்சிதம், இரத்தினபூபதி, காலஞ்சென்ற குமாரசாமியினதும் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் (சண்டிலிப்பாய்) சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.01.2001 புதன்கிழமை அவரது பிரம்படி இல்லத்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

*மில்லேன், பிரம்படி,*
*கொக்குவில்.* (82549)

தகவல்:-
ஞானரஞ்சிதம் (மனைவி)

உதயன்

## அது இல்லை; இது எவ்வாறு?

தமிழீழ விடுதலைப் புலிகளின் போர் நிறுத்தத்துக்குப் பதிலாக அரசாங்கமும் போர் நிறுத்தம் செய்யுமா என்பதனை அறிய மக்கள் பெரும் ஆவலாக உள்ளனர். குறிப்பாக வடக்கு — கிழக்கு வாழ் மக்களும், சமாதானத்தை விரும்பும் தென்னிலங்கை மக்களும் அரசு எந்த முடிவுக்கு வரப்போகிறது — சாதகமான முடிவா, அல்லது பாதகமான முடிவா— என்பதனை அறிந்து கொள்ள மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளனர்.

ஆனால் அரசாங்கமோ தீர்க்கமான முடிவு ஒன்றுக்கு வரமுடியாமல் தனக்குள் இழுபறிபடுகிறது; அதனால் இழுத்தடிக்கிறது. அரசாங்கத்திற்குள்ளே போர் நிறுத்தம் செய்வது குறித்து கருத்து வேறுபாடுகள் உள்ளன — இரண்டு கருத்துக்கள் உள்ளன. அமைச்சரவையிலும் அதே நிலைமை.

விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தினாலும் போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று பிரதமர்—இரண்டு நாள்களுக்கு முன்னரும் — ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னரும் —கருத்து வெளியிட்டுள்ளார்.

வெளிநாடு சென்றிருந்த ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர், அரசாங்கத் தரப்பின் போர் நிறுத்தம்குறித்த முடிவுதெரிய வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்துக்கு ஜனாதிபதி சமுகமளிக்காமையும், புதன்கிழமை நடைபெற இருந்த அமைச்சரவைக் கூட்டம் இறுதி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டமையும், போர் நிறுத்தம் குறித்த முடிவைச் சுமுகமாகச் செய்யக்கூடியநிலை அரசாங்கத் தரப்பில் இல்லை என்பதனையே வெளிப்படுத்துகின்றன.

இதன் விளைவு?

இனப்பிரச்சினைக்கான தீர்வு எவ்வாறு அமையவேண்டும் என்பது குறித்து ஆராய்வதற்குப் பதிலாக, போர் நிறுத்தம் செய்வதா இல்லையா என்ற சர்ச்சையில் காலம் கழிந்து கொண்டிருக்கிறது. அது மட்டுமன்றி, பேச்சுவார்த்தையைத் தொடங்குவதிலும் ஒரு தேக்க நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

நிபந்தனை எதுவுமின்றிப் புலிகளுடன் பேசுவதற்குத் தயார் என்று அரசாங்கம் கூறி வந்த போதிலும், அதற்கான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதில் அது அக்கறை காட்டவில்லை. அதனால் இருதரப்புப் பேச்சுக்கு அனுசரணையாளராகப் பணி செய்யும் நோர்வே மூன்று மாற்றுத் திட்டங்களை வகுக்க நேர்ந்துள்ளது.

பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு, இருதரப்புகளுக்கும் இடையே பரஸ்பர நல்லெண்ணம், நம்பிக்கை, உறுதிப்பாடு என்பனவற்றைத் தோற்றுவிக்கவே நோர்வே மூன்று மாற்றுத் திட்டங்களைத் தயாரித்துள்ளதாகச் சொல்லப்படுகிறது.

அரசாங்கம் வடக்கு —கிழக்கு மாகாணத்தின் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையை நீக்குவதற்கு உறுதி அளிக்கும் அதே வேளையில், விடுதலைப் புலிகள் ஏனைய மாகாணங்களில் தாக்குதல் நடத்தாமல் இருக்க உறுதி அளிக்கவேண்டும் என்ற அடிப்படையிலேயே அந்த மாற்றுத் திட்டங்கள் அமைந்துள்ளதாகச் சொல்லப்படுகின்றது.

நல்லெண்ணத்தை வளர்க்கக் கூடிய போர் நிறுத்தம் குறித்து முடிவு செய்ய இயலாத அரசு, நோர்வேயின் நல்லெண்ணத் திட்டங்களை ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்ப்பது எவ்வாறு?

# கடவுள் புகழ்பாடும் திருவெம்பாவை; மழைவளமும் மனநலமும் தருவது

திருவெம்பாவை என்பது, கன்னிப்பெண்கள் வைகறையில் ஒருவரையொருவர் துயிலெழுப்பி மார்கழி நீராடும் வரலாற்றினைக் கூறும் பகுதியாகும். திருவெம்பாவை இருபது திருப்பாட்டுக்களும் இறுதிகள் தோறும் எம்பாவாய் என்னும் தொடர்மொழியை உடைமையால் இப்பகுதி திருவெம்பாவை என்னும் காரணப் பெயர் பெற்றது.

மாணிக்கவாசக சுவாமிகள் இறைவன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவதலங்கள் தோறும் சென்று தரிசித்துத் திருவண்ணாமலையை அடைந்து அங்கு எழுந்தருளியிருக்கையில், கன்னிப்பெண்கள் தனு மாதத்தில் திருவாதிரையை இறுதியாகக் கொண்ட பத்து நாள்களிலும் வைகறைப் பொழுதில் துயிலுணர்ந்து எழுந்து தங்கள் தோழியர்களான கன்னியர்களை அவர்கள் இல்லங்கள் தோறும் சென்று துயிலுணர்த்தி எழுப்பிக் கொண்டு எல்லோரும் ஒருங்கு சென்று இறைவன் புகழைப் பாடிக்கொண்டு நீர்நிலையை அடைந்து நீராடி நியதி முடித்து, தூய ஈர வெண் மணலாற் பார்வதி தேவியின் திருவுரு அமைத்து வழிபட்டு, சிறந்த கணவர் கிடைக்கவும், மழைவளம் சிறக்கவும் வேண்டுதல் செய்வதனைக் கண்டு அவர்கள் கருதும் பொருளும் சைவ உண்மைப் பொருளும் அமைய அவர்கள் புகன்றதாக இத்திருவெம்பாவையை அருளிச் செய்வாராயினர்.

'மாதர்கொண் மாத ரெல்லா
மார்கழித் திங்க டன்னி
லாதிரை முன்னீ ரைந்தே
யாகிய தினங்க டம்மின்
மேதகு மனைக டோறு
மழைத்திருள் விடிவ தான
போதிவர் தம்மிற் கூடிப்
புனற்றட மாடல் செய்வார்'
'அன்னவ ரியல்பு கண்டார்
ஆங்கவர் புகன்றதாக
மன்னிய திருவெம் பாவை
வாசகம் பேசி'

எனவும்

'மலவிருளுற் றுறங்காமல்
மன்னுபரி பாகரருள்
செலமுழுக வருகவெனச்
செப்பல் திருவெம்பாவை'

எனவும் வருதலால் திருவெம்பாவை பாவை நோன்போடு சைவ உண்மைப் பொருளும் அமையுமாறு அருளிச் செய்யப்பட்டதென்பது அறியலாகும்.

மகளிர்செயல்களில் வைத்து அவர் கூற்றாக அடிகள் அருளிச் செய்த திருவாசகப் பகுதிகள் அம்மானை, தெள்ளேணம், பூவல்லி முதலியன வாகும்.



இத்திருவெம்பாவை திருவண்ணாமலையில் அருளிச் செய்யப்பட்டதென திருவாதவூரடிகள் புராணமும், திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பட்டதென திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணமும் கூறுகின்றன.

"ஆதியு மந்தமுமில்லா வரும்
பெருஞ்சோதியை"
"மாலறியா நான்முகனும்
காணாமலையினை"
"பாதாள மேழினுங்கீழ்
சொற்கழிவு பாதமலர்"
"போதார் புனைமுடியும்
எல்லாப்பொருள் முடிவே"
"அண்ணா மலையான்
அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர்"

என வருவனவும் திருவண்ணாமலையில் அருளிச் செய்யப்பட்டமையை வலியுறுத்துவனவாகும்.

திருவெம்பாவை போன்ற பிரபந்தங்கள் தொன்மை வாய்ந்தன என்பது, அவை "பாவைப்பாட்டு" என முன்னோர்களால் வழங்கப்பட்டன என்பதும், இதனைத் தொல்காப்பியச் செய்யுளுரையில் "சிறுபான்மை பாவைப்பாட்டும் அம்மனைப் பாட்டும் முதலாயின நான்கடியின் இகந்து வருவனவாயின" எனவும், "ஈரடி யாலே தாழிசைக் கொச்சகம் வரு" மெனவும், "அடி நிமிர்ந்தொழுகியதன் சிற்றெல்லையாகிய பத்தடியளவும் பாவைப்பாடலும் அம்மனைப் பாடலும் போலும் தரவு கொச்சகம் வரும்" எனவும், பேராசிரியர் உரைத்தவற்றால் அறியலாம். யாப்பருங்கலச் சூத்திர விருத்தியுரையுள்.

"கோழியுங் கூவின குக்கில்
அழைத்தன
தாழியுள் நீலத் தடங்கண்ணீர்
போதுமினே
ஆழிசூழ் வையத் தறிவ னடி
யேத்திக்
கூழை நனையக் குடைந்துங்
குளிர்புனல்
ஊழியுண் மன்னுவோ
மென்றேலோ ரெம்பாவாய்"

என்னும் பாடலொன்று காட்டப்பட்டிருத்தலும் பாவைப் பாட்டின் தொன்மையை உணர்த்துவதாகும்.

### ஏல் ஓர் எம்பாவாய்

திருப்பாட்டுக்களின் இறுதி தோறும் வரும் ஏலோரெம்பாவாய் என்பதில் ஏலும் ஓரும் அசை. பாடேலோரம்மானை (சிலப். 29 அம்மானை வரி) என்புழி ஏலும் ஓரும் அசை என அரும்பதவுரைகாரர் உரைத்தமையுங் காண்க. ஏல்-ஏற்றுக்கொள், ஓர்-ஆராய்ந்து பார் என்னும் பொருள் கூறின், கன்னி ஒருத்தியை முன்னிலைப்படுத்திக் கூறும் இடங்களிலன்றிக் குழுவாக முன்னிலைப்படுத்தியும இறைவனையும் மழையையும் முன்னிலைப்படுத்தியும் கூறும் இடங்களில் இயைந்து வராமையின் அசை யெனக் கோடலே பொருந்துவதாகும்.

### எம்பாவாய்

எம்பாவாய் என்பது திருவெம்பாவை என்னும் பெயருக்கே ஏதுவாயுள்ளது; கன்னியர்களின் பாவை நோன்பிற்குரிய பார்வதி தேவியைக் குறிப்பது; திருவெம்பாவையின் உள்ளுறைப் பொருளாகிய சத்தியை வியந்து-என்னும் உட்பொருளுக்கு இயைபுடையது பாவாய் என, விளித்து முன்னிலைப்படுத்தியமைக்கு ஏற்ப திருப்பாடல்கள் தோறும் எம்பாவாய் என்பதற்கு முடிவு கூறுதல் அமைவுடைத்தாகும்.

ஆதியும் அந்தமும் இல்லா
அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக்
கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ
வன்செவியோ நின்செவி
தான்
மாதேவன் வார்கழல்கள்
வாழ்த்திய வாழ்த்தொலி
போய்
வீதிவாய்க் கேட்டலுமே
விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதாரமளியின் மேல்
நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள்

### ஞானக் கதிர்

கிடந்தாளென்னேயென்னே
ஈதேயெந்தோழி
பரிசேலோர் எம்பாவாய்.

"ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெருஞ் சோதியாகிய இறைவனை யாம் புகழ்ந்து பாடக் கேட்டும் மாதே துயில்கின்றாயோ? நின் செவிகள் தான் கேட்கும் தன்மையில்லாதவன் செவிகளோ? என்று துயிலெழுப்ப வந்தவர் வினாவுதலும் அதற்கு விடை யாதுமின்மையால் வீட்டினுள்ளே சென்றவர்கள் தம் தோழியின் நிலை கண்டு, வீதியில் மாதேவனுடைய திருவடிகளை யாங்கள் புகழ்ந்து வாழ்த்திய வாழ்த்துப் பாடல்களின் ஒலி சென்று கேட்ட அளவில் படுக்கையினின்றும் புரண்டு விம்மி விம்மி அழுது தன்னை மறந்து இவ்வாறு யாதொன்றுஞ் செய்ய இயலாதவளாய்ப் பரவசமாய்க் கிடந்தாள் இஃதென்ன வியப்பு, எம் தோழியின் பக்தித்திறம் இதுவா" என வியந்தார்கள்.

(பண்டிதமணி சு. அருளம்பலவனாரின் திருவாசக ஆராய்ச்சி உரையில் ஒரு பகுதி.)

## ஊனமுற்றோர் விழா

யாழ். பிரதேச செயலக ஊனமுற்றோர் தின விழா யாழ். நக்கா வீதியில் உள்ள பிரதேச செயலக தையல் பயிற்சி நிலையத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பிரதேச செயலாளர் பா. செந்தில் நந்தனன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். செயலக மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் கலந்து கொள்வார்.

கட்டுரை கவிதைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்குதலும் ஊனமுற்ற 56பேருக்கு அன்பளிப்பு வழங்குதலும் இடம்பெறும். (ஐ—30)

## நாளை

மார்கழி 22
சனிக்கிழமை
திதி: ஏகாதசி
முற்பகல் 11.28 வரை.
நட்சத்திரம்: கார்த்திகை
முன்னிரவு 8.54 வரை.
சுவர்க்கவாயில்
ஏகாதசி விரதம்
சுபநேரம்: 3-31 — 5-01
குளிகாலம் 09-31—11-01
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## பனை அபிவிருத்திச் சபைக்கு பணிப்பாளர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், ஜன. 5

இலங்கை பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக ஏ. எம். பாக்கியநாதன் மீண்டும் வடக்கிற்கான அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு — கிழக்கு தமிழ் விவகாரங்களுக்கான அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தாவினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கலைப் பட்டதாரியான இவர் கடந்த ஆறு வருடங்களாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவராகப் பதவி வகித்து வருவது குறிப்பிடத்தக்கது. வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியான பனஞ்சாராயத்தினை தென்னிலங்கையில் அறிமுகப்படுத்தியதன் மூலம் பனைவளத் தொழிலாளர்களின் பொருளாதார சமூக மேம்பாட்டிற்கு இவர் வழி வகுத்தார்.

இவரது பதவிக் காலத்திலேயே உற்பத்திப் பொருள்களின் தர நிர்ணயத்திற்கான சர்வதேச விருது, தங்கப்பதக்கம் ஆகியவற்றைப் பனை அபிவிருத்திச்சபை பெற்றுக் கொண்டது. அத்துடன் ஆராய்ச்சி அலகு மூலம் பல பனைசார் நவீன உற்பத்திப் பொருள்களும் கண்டுபிடிக்கப் பட்டன.

யாழ். மாவட்டத்தில் பனை வள மேம்பாட்டிற்காக ஐ.நா. நிறுவனங்களிலிருந்தும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 'நோராட்' (NORAD) முதலிய தொண்டு நிறுவனங்களிலிருந்தும் உதவிகள் பெற்று பல வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

ஆறுபேர் கொண்ட பணிப்பாளர் சபையில் உறுப்பினர்களாக எஸ். வேலாயுதன், டாக்டர் கே. கிருஷ்ணானந்தசிவம், எம். ஏ. ஜீ சபருல்லா, டபிள்யூ. எச். முனசிங்க, டி. எஸ். எதிரிசிங்க, கே. ஜேமுத்துராஜா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். (ஐ)

## மனையியல் கண்காட்சி

பருத்தித்துறை பிரதேச செயலர்பிரிவில் உள்ள பொலிகண்டி மேற்கு மாதர் அபிவிருத்தி நிலையத்தின் தையல் மனையியல் கண்காட்சியும் விற்பனையும் எதிர்வரும் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி தலைமையில் நடைபெறவுள்ள இவ் வைபவத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம் போல் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ—109)

## சமய சந்நிதிகளில்

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இசைக் கலைமணியின் செல்வி பங்கயர்ச்செல்வி – தவபாக்கியநாதனின் இன்னிசை நிகழ்ச்சி இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

தொல்புரம் மக்கி கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்பாள் கோயிலில் மார்கழி மாத திருவெம்பாவை வீதிப் பஜனை தினமும் அதிகாலை 5.00 மணிக்கு ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி காலை 6.30 மணிக்கு ஆலயவாசல் வந்து சேர்கின்றது.

ஆலய பரிபாலன சபையினரும், தொல்புரம் மத்திய சனசமூக நிலைய வாசிகசாலை இளைஞர்களும் கூட்டாக இந்த வீதிப் பஜனையை நடத்தி வருகின்றனர்.

### உதயவாக்கு

புலன்களை வஞ்சிக்கிறோம் என்று தெரிந்தும், கானல் நீரைத்தேடி ஓடும் மான் போல, புலன்களின் அடிமைகளாகவே நாம் நடந்து கொள்ளுகிறோம்.

— ஸ்ரீராமர்

## வலி. மேற்கு இந்து ஆலயங்களின் மகாசபை

சுழிபுரம்

வலி. மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இந்து ஆலயங்களை ஒருங்கிணைத்து மேற்படி சபை உருவாக்கப்பட்டுள்ளது. இவ் மகா சபையில் அங்கத்துவம் பெறுவதற்காக உரிய படிவங்கள் எம்மால் விநியோகிக்கப்பட்டு வருகிறது; உரிய விண்ணப்பப் படிவத்தினை எமது செயலாளரிடம் நேரிலோ, தபால் மூலமோ பெற்று 20 - 01 - 2001- க்கு முன் செயலாளருக்கு அனுப்பி வைக்கவும்.

து. ரகு
தலைவர்,
வழக்கம்பரை,
சுழிபுரம்.

மு. பத்மநாதன்
செயலாளர்,
சங்கானை வீதி,
சித்தன்கேணி.

ந. திரிலோகநாதன்
போஷகர்,
வலி.மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

(82500)

## இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLEAS) பரீட்சைக்கான வழிகாட்டல் செயலமர்வு அங்கம் - 3

இடம்:- யா/இந்துமகளிர் கல்லூரி
காலம்:- 07-01-2001 ஞாயிறு காலை 8-30 மணி

மேற்படி பரீட்சைக்குத் தோற்றுபவர்களின் நன்மை கருதி வழிகாட்டல் செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அனைவரையும் பங்கு பற்றிப் பயனடையுமாறு அழைகின்றோம்.

GRADUATE TEACHER PROFESSIONAL DEVELOPMENT ORGANIZATION

திரு. A. C. ஜோர்ச்
செயலாளர்

திரு பா. தனபாலன்
தலைவர்

(சி-14638)

## பருத்தித்துறை வர்த்தகர் சங்கத்தின் ஆதரவில் மாபெரும் விளையாட்டுப் போட்டி

பருத்தித்துறை மாநகரில்

போட்டிகள்:-

மல்யுத்தம்,
குத்துச் சண்டை,
கராத்தே,
கயிறு இழுத்தல்.

போட்டிகள் நடைபெறும் திகதி பின்பு அறிவிக்கப்படும்.

விபரங்களுக்கு:-

ஆ. செல்வநாயகம்,
ஈஸ்வரி நகை அகம்,
பிரதான வீதி, பருத்தித்துறை.

(சி/14641)

## பருத்தித்துறை சென். அன்ரனிஸ் இளைஞர் மன்றம்

வனப்புடன் வழங்கும்

## கிறிஸ்மஸ் நைற் 2000 கரோல் நிகழ்ச்சிகள்

இடம்: அற்புதர் அரங்கம்
காலம்: இன்று (05 - 01 - 2001)
வெள்ளிக்கிழமை மாலை 7.00 மணி.

இன்னிசைக் கானங்கள்
கண்ணுக்கினிய நடனங்கள்
சிந்திக்கவைக்கும் நாடகங்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சென். அன்ரனிஸ்
இளைஞர் மன்றம்,
பருத்தித்துறை.

இந் நிகழ்வினை வாழ்த்தி வரவேற்போர்:-

மைக்றோ பானு
அலுமினியம் இன்டஸ்ரியஸ்
பருத்தித்துறை.

(சி/13640)

## பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜன. 5

இம் மாதம் இரண்டாம் திகதி வரையும் வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

### சங்கானை

(161774ஏ), (161774பி),
(161844ஏ), (166522ஏ),
(166522பி), (166522சி),
(170417ஏ), (172906ஏ),
(173037ஏ), (173037பி),
(174909ஏ), (174909பி),
(174931ஏ), (174931பி),
(174988ஏ), (175213ஏ),
(175213பி), (175213சி),
(175213டி), (175213ஈ),
(175213எவ்), (175901ஏ),
(175976ஏ), (175976பி),
(175977ஏ), (175988ஏ),
(175988பி), (175995ஏ),
(175995பி), (176589ஏ),
(176598ஏ), (176610ஏ),
(176803ஏ), (176803பி).

### கோப்பாய்

(167501ஏ), (167501பி),
(167501சி), (173290ஏ),
(173290பி), (173306ஏ),
(173306பி), (173341ஏ),
(173341பி), (173341சி),
(173410ஏ), (175627ஏ).

### நல்லூர்

(165529ஏ), (165529பி),
(165529சி), (165529டி),
(165529ஈ), (172708ஏ),
(172708பி), (172928ஏ),
(172928பி), (173084ஏ).
(174771ஏ).
[174924ஏ] [174968ஏ],
[174968பி], [175064ஏ],
[175084ஏ], [175084பி],
[175084சி], [175084டி],
[175084ஈ], [175084எவ்],
[175187ஏ], [175187பி],
[175205ஏ], [175778ஏ],
[175778பி], [175778சி],
[175565ஏ], [176669ஏ].

### சண்டிலிப்பாய்

[170021ஏ], [174868ஏ].
[174868பி], [174868சி],
[174925ஏ], [174993ஏ],
[174993பி], [175094ஏ],
[175094பி], [175094சி],
[175831ஏ], [175862ஏ],
[175867ஏ], [175867பி],
[175894ஏ], [175957ஏ],
[176005ஏ], [176582ஏ],
[176582பி], [176640ஏ],
[176640பி], [176640சி],
[176643ஏ], [176774ஏ],
[776774பி], [176774சி].

### தெல்லிப்பழை

[16995ஏ], [175938ஏ],
[175938பி], [175938சி].
[178718ஏ], [178718பி].

### உடுவில்

[166511ஏ], [174878ஏ],
[174878பி], [175075ஏ],
[175761ஏ], [175761பி].
(175761சி), (175761டி),
(175762ஏ), (175819ஏ),
(175848ஏ), (175909ஏ),
(175999ஏ), (176541ஏ),
(176596ஏ), (176618ஏ),
(176618பி), (176618சி),
(176618டி), (176716ஏ).

(ம-10)

## பாடசாலையில் கட்டடத் திறப்பு விழா

திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் புதிய கட்டடத் திறப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறுகிறது.

புதிதாக அமைக்கப்பட்ட கீழ்த்தளக் கட்டடம் மற்றும் செயற்றிட்ட அறை (தரம்-1) ஆகியவை இன்று திறக்கப்படுவதாக அதிபர் கே.ஜெயானந்தன் தெரிவித்துள்ளார்.

(ஒ)

## தளபாடங்கள்

காரைநகர், ஜன. 5

காரைநகர் போரூட் திட்டத்தினால் காரைநகர் கலாநிதி ஆ தியாகராசா மத்திய மகா வித்தியாலய நூலகத்திற்கு தேவையான தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(இ-73)

## பிரார்த்திக்கின்றோம்

நீர்வேலி கந்தசுவாமி கோயில் பிரதம குருக்கள்
வேத ஆகம சாஸ்திர ஜோதி

சிவஸ்ரீ

### சுவாமிநாத - இராஜேந்திரக் குருக்கள்

அவர்களின் மறைவு சைவ உலகுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

எமது ஆலய கும்பாபிஷேகங்கள், வருடாந்த உற்சவங்களை முன்னின்று நடத்தி ஆலய வளர்ச்சிக்கு ஊன்று கோலாயமைந்த குருக்கள் ஐயா அவர்களின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபையும்,
உபயகாரர்களும்.

அச்செழு அம்மன் கோயில்,
நீர்வேலி.

(82544)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
28
—
02
—
1947



மறைவு
18
—
12
—
1999

### அமரர் சிவசுப்பிரமணியம் சிவகுமாரன்

(ஆசிரியர், தாவடி இந்து தமிழ்க் கலவன்பாடசாலை)

திதி: 05-01-2001

ஆண்டொன்று சென்றாலும் அன்பு முகம் மாறுமோ? கருணையின் வடிவே பாசத்தின் இருப்பிடமே! எப்போதும் உங்கள் முகம் காண்போம் உங்கள் குரல் கேட்போம் என்றும் எங்கள் மனதை விட்டு அகலாத எங்கள் அன்புத் தந்தையே! குடும்ப ஒளிச் சுடரே! தெய்வமே! எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு வைகுண்ட ஏகாதசித் திதியில் இறையடி சேர்ந்த அன்பு அப்பாவே! ஓராண்டு அல்ல பல்லாண்டு சென்றாலும் உங்கள் பாச நினைவுகள் அன்பு உள்ளம் என்றும் எங்கள் நெஞ்சங்களில் நீங்காது.

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

மனைவி, பிள்ளைகள்.

" தனபதி "
இணுவில் மேற்கு.
இணுவில்.

(82480)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மயில்வாகனம் கனகம்மா

தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மயில்வாகனம் கனகம்மா 3-1-2001 புதன்கிழமை இரவு காலமானார்.

இவர் வயிரமுத்து மயில்வாகனத்தின் (இளைப்பாறிய ஆசிரியர், யா / கொக்குவில் இந்துக்கல்லூரி) அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி இராசலட்சுமி கந்தையா, காலஞ்சென்ற கந்தசாமி (மலேசியா) மற்றும் கந்தப்பிள்ளை (U K. இளைப்பாறிய ஆசிரியர், யா / இந்துக்கல்லூரி), திருமதி தியாகராசா கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (04-01-2001) வியாழக்கிழமை பி. ப. 2.00 மணிக்கு தாவடி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு. வ. மயில்வாகனம்
(கணவர்)

தேவாலய ஒழுங்கை,
தாவடி, கொக்குவில்.

(82529)

### கனகசபை விஜாலாட்சி

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட விஜாலாட்சி அவர்கள் 02-01-2001 அன்று இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ச. கனகசபையின் அன்பு மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. சிவபாலன் (மகன்)
(இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)

67, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(82542)



பாலர் கல்விக் கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 15 பாலர் பாடசாலைகளுக்கு இடையிலான 35 ஆவது வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

யாழ்.இந்து மகளிர் கல்லூரி விளையாட்டு அரங்கில் இடம்பெற்ற இவ்விழாவை ஆயுதப் போராட்டங்களில் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான ஐ.நா. திட்ட அலுவலர் சாள்ஸ் ஸ்ரிக்லான்ட், மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம்.

15 பாலர் பாடசாலைகள் பங்குபற்றிய போட்டிகளில் அரசடி ஞானக் குழந்தை இல்லப் பாலர் பாடசாலை அதி கூடிய புள்ளி பெற்று முதலாவதாக வந்தது. (ஐ)

## சாயி கவசம் பிரசுரம் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜன.5

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் சத்தியசாயி கவசம் சிறிய நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளது

யாழ்.நாவலர் வீதியில் உள்ள பகவான் மருந்தகத்தினர் இந்த பிரசுரத்தை இலவசமாக வெளியிட்டுள்ளனர். (ஐ)

## தொலைக்காட்சி அன்பளிப்பு

சண்டிலிப்பாய்,ஜன.5

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக பொது நூலகத்திற்கு வலி.தென்மேற்கு பிரதேச சபை தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை வழங்கியுள்ளது. இதனை இயக்குவதற்கான அன்ரனா போன்ற சாதனங்களும் வழங்கப்பட்டுள்ளன. கல்வி சார் நிகழ்ச்சிகளுக்கு இத் தொலைக்காட்சிப் பெட்டி பயன்படுத்தப்படவுள்ளதாக பிரதேச சபை உப அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-135)

## சமுர்த்தி செயலணிக் கூட்டம்

நவாலி,ஜன.5

நவாலி தெற்கு ஜே136 கிராம சேவையாளர் பிரிவில் சமுர்த்தி செயலணிக் குழு கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு சமுர்த்தி முகாமையாளர் கே.குமாரவேல் தலைமையில் நவாலி அரசடி மகாவித்தியாலயத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வுக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன், நிர்வாக உத்தியோகத்தர் க. செல்வராசா, திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் மு.பாலசிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர். (ம-100)

## முத்திரைச்சந்திப் பகுதியில் உள்ள புராதன வரலாற்றுச் சின்னங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை

வலி.வடக்கு,ஜன.5

நல்லூர் முத்திரைச் சந்திப் பகுதியில் அமைந்துள்ள புராதன வரலாற்றுச் சின்னங்கள் புனரமைப்பு செய்யப்பட்டு பாதுகாக்கப்படவுள்ளன.

வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளார்.

வரலாற்றுச் சின்னங்களை பாதுகாப்பது மற்றும் புனரமைப்பு செய்வது தொடர்பான கலந்துரையாடல் யாழ்.செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரசாங்க அதிபர் உட்பட பலர் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். இந்தக் கலந்துரையாடலில், தற்போது காணப்படும் மந்திரிமனை, முத்திரைமண்டபம், ஜமுனா நீர் ஏரி என்பவற்றை பாதுகாப்பதுடன் புனர்நிர்மாண நடவடிக்கைகளையும் மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

ஏற்கனவே இப்பணியை முன்னெடுப்பதற்காக நல்லூர் பிரதேச செயலாளர் கலாநிதி.க.குணராசாவினால் வரலாற்றுக் கழகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். (ம-86)

DCS இன் 5000 SCHOLARSHIPS

Free Exam to the School Students

விண்ணப்பமுடிவுத் திகதி 05–01–2001

## திருத்தப்படாத நிலையில் வீதி

மானிப்பாய் அருணாச்சலம் உபாத்தியாயர் வீதி கடந்த 15 வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாது உள்ளது.

மானிப்பாய் ரிசி லேனுக்கு அருகில் உள்ள இந்த வீதியை திருத்தக்கோரி பல தடவைகள் விண்ணப்பம் செய்த போதும் இதுவரை திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-185)

## திருப்பலி

கிளாலி ஆத்மஜோதி அருட் சகோதரர் பிரான்சிஸ் அடிகளாரின் 20 ஆவது நினைவு தினமான இன்று யாழ்.சுண்டிக்குளி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

ஆலயப் பங்குத் தந்தையினால் இன்று காலை 6.30 மணிக்கு இந்த திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

கடந்த 20 வருடங்களுக்கு முன் குருநாகலில் இடம்பெற்ற ரயில் விபத்துச் சம்பவத்தில் அருட் சகோதரர் பிரான்சிஸ் அடிகளார் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

## கட்டடத்தைத் திருத்தக் கோரிக்கை

சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் சேதமடைந்த கட்டடத்தைத் திருத்தித் தருமாறும், மாணவர்களின் நலன் கருதி புதிய வகுப்பறை மண்டபம் ஒன்றை நிறுவித் தருமாறும் சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஐ-135)

## வீதி திருத்த ஏற்பாடு

சில்லாலையில் கடந்த 15 வருடகாலமாக திருத்தப்படாது சேதமடைந்த நிலையிலுள்ள சில்லாலை கற்று வீதி, யாழ். வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் விரைவில் திருத்தப்படவுள்ளது. சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கம் இவ் வீதியை திருத்தித் தருமாறு யாழ். வீதி அபிவிருத்தி திணைக்களத்திடம் கடித மூலம் கோரிக்கை விடுத்திருந்தது. (ஐ-135)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 24 - 04 - 1917



மறைவு 06 - 12 - 2000

### திருமதி பொன்னம்பலம் நாகரத்தினம் (பூரணம்)

06.12.2000 அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும். மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் தேறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவி செய்தவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (05.01.2001) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'ஆயர்பாடி'
இல.01,நாமகள் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

மகள், சகோதரன், மருமகன்,
பேரப்பிள்ளைகள் மற்றும்
உறவினர்.

(82534)

# வாசகர் திருமுகம்

## தொடர்ந்தும் புழுப் பிடித்த அரிசி

கடந்த வாரங்களில் சுகாதார அதிகாரிகளின் நிவாரணம் வழங்குவதற்கு வைத்திருந்த பாவனைக்குதவாத அரிசியைக் கண்டுபிடித்திருந்ததும் அதனைத் தொடர்ந்து பலரது அறிக்கைகள் வெளியானதும் தெரிந்ததே. இப்போதும் (இந்தவாரமும்) அந்த விடயம் பத்திரிகைகளில் வெளியாகிய வண்ணம் உள்ளன.

இது இவ்வாறு இருக்க தற்போதும் பாவனைக்கு உதவாத புழு, வண்டு என்பன நிறைந்த அரிசியும் (சேரல், புழுங்கல்), பாவனைக்குதவாத - பல நாள் இருப்பில் இருந்த - சீனியும் (உவர் புளிப்பு மிகுந்த குழைந்த சீனி) எமது சங்கத்தில் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்டு கொண்டும் இருக்கிறது. எமது கடை உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கத்தின் கிளையான கிளை.இல.15(நவிண்டில்) ஆகும்.

இதை உரியவர்களிடம் தெரிவித்தால் அவர்களும் அசட்டையாக உள்ளனர். எனவே தாங்கள் இதை பிரசுரிப்பதன் மூலம் 'நந்தி' போன்றோர் விடும் அறிக்கைகளுக்கு பதில் அமையக்கூடும். அவர் கூறுகிறார் 'பொருள்கள் வந்து இரண்டு கிழமைகளில் விநியோகிக்கப்பட்டு விடுமாம்" என்று.

கரவெட்டி. - வி.எஸ்.குமார்.

## இலவசப் பாடநூல் வெறும் பேச்சுக்குத் தானா?

சென்ற ஆண்டு (2000) தரம் 10, தரம் 7 வகுப்புக்களில் கல்வி கற்ற மாணவர்கள் சில பாடப்புத்தகங்கள் இல்லாத நிலையிலேயே இறுதித் தவணைப் பரீட்சை செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். புதிய பாடத்திட்டத்தின் தரம் 10 கணிதப் பாடப் புத்தகம் பகுதி II ஒன்றுகூட இறுதிவரை மாணவர்களுக்கு ஒரு பிரபல பாடசாலையில் வழங்கப்படவில்லை. அதேபோலத்தான் தரம்-10 ஆங்கிலப் புத்தகமும் இறுதித் தவணைப் பரீட்சை முடிவடைந்த பின்னும் ஒரு ஆங்கிலப் புத்தகங்களும் மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை. காரணம், பாடசாலைக்கு கணிதம் தரம்-10 பகுதி II புத்தகம் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆங்கிலப் புத்தகம் நான்கு பாடசாலைகளுக்குக் கிடைத்ததனால் ஆங்கிலப் பாடத்தைத் தரம் 10 மாணவர்களுக்கு கற்பித்துக் கொண்டிருந்த ஆசிரியர்கள் நால்வருக்கும் வழங்கப்பட்டது. சில மாணவர்கள் கொழும்பிலிருந்து தமது உறவினர்கள், தெரிந்தவர்கள் மூலம் புத்தகங்களைப் பெற்றார்கள். ஏனைய மாணவர்கள் பாடங்களை நிழற்பிரதி எடுத்தே கற்றனர். மேலும், தரம் 10இன் சமூகக்கல்வியும் வரலாறும், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் ஆகிய இரு புத்தகங்களும் குறிப்பிட்ட தொகையில் கிடைத்ததனால், மாணவர்களுக்குப் போதியளவு புத்தகங்கள் இல்லை. அதனால் இலவசக்கல்வி; இலவசப் புத்தகங்கள் வழங்கும் நாடு எனப் பெயர்பெற்ற இலங்கையின் மணிமுடியாகத் திகழும் யாழ்.குடாநாட்டுப் பாடசாலைகளில் குலுக்கல் முறையில் புத்தகங்களைப் பகிர்ந்து எடுக்கவேண்டிய அவலமான, கவலைக்கிடமான நிலைக்கு மாணவர்கள் தள்ளப்படுகின்றனர். இதே நிலை இந்த வருடம் (2001) ஜீ.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சையை எதிர்நோக்கும் வேளையிலும் ஏற்படுமா? இது தமிழ் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு ஏற்படுத்தப்படும் சதியா? இதற்கு தமிழ்க்கல்வி மேலதிகாரிகள் துணை போகிறார்களா? இல்லையென்றால் இந்த வருடமாவது இந்நிலை வராமல் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

- பாதிக்கப்பட்ட ஒரு மாணவி

## நகரங்களின் பெயர் மாற்றம்

25.12.2000 உதயன் நாளிதழில் கல்கத்தா நகரம் கொல்கத்தா என்ற பெயரில் அழைக்கப்பட இருப்பதாக செய்தி வெளியாகி இருந்தது. பம்பாய் நகரம் மும்பையாகவும், மற்றாஸ் நகரம் சென்னையாகவும் முன்னதாகவே மாற்றம் பெற்றிருந்தன.

தென் இலங்கையிலும் சில நகரங்களுக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டிருந்தன.

உ-ம் DONDRA - தெவிநுவர

1999 ஆவணியில் ஒரு நாள் 'உதயனில்' ஒரு கட்டுரை வெளியாகி இருந்தது. அதில் கட்டுரையாளர் யாழ்ப்பாணம் என்ற பதத்திற்குப் பதிலாக JAFFNA என்ற பெயரே அதிகமானவர்களால் பாவிக்கப்படுகிறது என்று ஆதங்கம் வெளியிட்டிருந்தார்.

இந்தியாவில், தென் இலங்கையில் இடம் பெற்றது போல JAFFNA ஏன் யாழ்ப்பாணம் என்று மாற்றம் பெறக்கூடாது? யாழ்.மாநகரசபை இது பற்றி ஆலோசித்து ஆவன செய்யுமா?

புத்தூர் கிழக்கு. இ.சின்னத்துரை.

BITSMANS

கல்வி நிறுவனம் ~ மானிப்பாய்

A/L 2003 கலை, வர்த்தகம்

| | |
|---|---|
| தமிழ் ~ N.பாலா | பொருளியல் ~ சன் |
| அளவையியல் ~ R.P.சர்மா | கணக்கீடு ~ N.ராஜன் |
| இந்துநாகரீகம் ~ N.பாலா | வணிகக்கல்வி ~ நந்தீஸ், முரளி |
| புவியியல் ~ ஜெகன் | பொதுவினா ~ தவசேகர் |
| வரலாறு ~ வாகீசன் | பொதுஆங்கிலம் ~ M.A.HARI |
| கிறிஸ்தவம் ~ வசந்தன் | |

ஆரம்பம்:- 06.01.2001 சனி மாலை 2.30 (C/14624)

## பயிற்சி நெறிகள் ஆரம்பம் - 2001

பருத்தித்துறை, கரவெட்டிப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனங்களினால் பின்வரும் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தட்டச்சு பயிற்சி நெறி
தையல் பயிற்சி நெறி
} பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய இரு பிரதேச சம்மேளனங்களிலும் நடைபெறும்.

தகுதியுடையோர் 20-01-2001 ற்கு முன்னர் அந்தந்தப் பிரதேச சம்மேளன காரியாலயத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

(82543) இளைஞர் சேவை அலுவலர்
பருத்தித்துறை, கரவெட்டி.

# குடாநாட்டுக்குப் பொருளாதாரப் பலம் சேர்த்த தென்னைச் செய்கையின் பரிதாப நிலை

## ஒரு லட்சத்துக்கு மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பளித்த தோட்டங்கள் இப்போது மௌனி!

## தென்னந்தோட்ட உரிமையாளர் ஒருவரின் அவலக் குரல் இது

இலங்கையின் முக்கிய வர்த்தக விவசாயப் பயிர்ச்செய்கையில் தென்னையும் ஒன்றாகும். யாழ். குடாநாட்டிலும் தென்னைச் செய்கை பொருளாதார பலம் சேர்க்கும் ஒன்றாக விளங்குகிறது.

இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதில் தேயிலை இறப்பரைப் போன்று தென்னையும் முக்கியமானதே கிராமப் புறப் பொருளாதாரத்திலே தென்னை வகிக்கும் இடமோ மிகச்சிறப்பானது.

தெங்குப் பொருள்கள் பொது மக்களுக்குப் பல்வேறு வகைகளிலும் பயன்படுகிறது. உணவுப் பொருளாகவும் கைத்தொழில்களுக்கான மூலப் பொருளாகவும் யாழ். குடாநாட்டில் அது பயன்படுத்தப்படுகின்றது.

யாழ்.குடாநாட்டில் தென்னை பெருமளவில் பச்சிலைப்பள்ளி, தென்மராட்சியிலும், வடமராட்சியின் சில பகுதிகளிலும், வலிகாமம் பகுதியிலும் செய்து வளர்க்கப்படுகின்றது. யாழ். குடாநாட்டில் உற்பத்தியாகும் தெங்குப் பொருள்கள் பெரும்பாலும் குடாநாட்டு மக்களால் நுகரப்படுவதால் அது வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித்தருவதில்லை. அதனால் குடாநாட்டுக்கு தென்னைச்



செய்கையின் முக்கியத்துவம் உணரப்படுவதில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

1) தோட்ட விஸ்தீரணம் குறைவதும், போதிய பராமரிப்பின்மையும்.

2) நுகர்வோர் எண்ணிக்கை அதிகரித்தல்.

மேலும் சொல்லப்போனால் 1980 ஆம் ஆண்டுக்குப் பின் புதிய தோட்டம் உருவாக்கப்படவில்லை. இருக்கும் மரங்களில் பெரும்பாலானவை 50 வயதைத் தாண்டியவை.

தென்னைமரம் ஒன்றை அது நட்டு பலன்தர - குட்டையினம் 5 முதல்7 வருடங்களும் நெட்டையினம் 8முதல் 12 வருடங்களும் செல்லும். அது பராமரிப்பைப் பொறுத்து.

ஒரு தென்னங்கன்றை நட்டுப் பலன் தர வைப்பதற்கு 5000 ரூபா செலவாகும்.(வீடுகளில் நடுவதுபோல் அல்ல - காடு வெட்டி, வேலி போட்டு, நிலம் தயார்செய்து, கிடங்கு வெட்டி, பிள்ளை வாங்கி வைத்து 5 வருடம் நீர் ஊற்றி, உழவு செய்வது, பசளை இடுவது நட்டு வைப்பது உட்பட)

ஒரு தென்னைமரம், தன் வாழ்நாளில்(60 வருடங்கள்) 60,000 ரூபாவுக்கு குறையாத வருமானத்தை தரும், இதற்கு நல்ல பராமரிப்புத் தேவை. (ஒரு வருடம் 80-100 தேங்காய், 10 ஓலை, 100 பொச்சுமட்டை, சிரட்டைக்கரி போன்றவை தரும்.)

ஆகவே இன்று யாழ்.குடாநாட்டில் தறிக்கப்பட்ட தென்னைமரங்களின் உற்பத்திச் செலவு என்ன? வருமான நட்டமோ பல கோடி ரூபாக்கள் அத்தனையையும் எங்கள் யாழ். குடா மண் இழந்துள்ளது. இது குறித்துச் சற்றுப் பொறுமையாகச் சிந்தித்துப் பாருங்கள்.

தென்னந் தோட்டங்களில் முதலீடு செய்தவர்களின் நிலை என்ன? இதை ஈடுசெய்ய முடியுமா? தேசப் பற்றுள்ள மக்களே! சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

### வேலைவாய்ப்பு

தென்னந் தோட்டத்தினால் சுய வேலைவாய்ப்புப் பெற்ற சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் கடந்த 9 மாதங்களாக எந்த விதமான வருமானமும் இல்லாமல் அகதிகளாக நாடோடிச் சீவியம் நடத்துகிறார்கள். அவர்களின் விவரத்தை அட்டவணையில் படியுங்கள்.

மேற்கூறப்பட்ட தரப்பினர் அரச அதிபர் தங்களுக்கு ஏதாவது செய்வார் என்று காத்திருந்து கடைசியில் அவர்களுக்கு ஏமாற்றமே எஞ்சியது. ஏனைய தொழிலாளருக்கு வழங்கியது போன்று செயலகம் கவனிக்கும் என்று எண்ணியதே ஏமாற்றத்திற்கான காரணம்.

### எதிர்நோக்கும் பிரச்சினைகள்

1) யாழ். குடாநாட்டில் உள்ள தென்னை மரங்களின் எண்ணிக்கை ஒருவருக்கும் தெரியாது.(ஒரு அண்ணளவான கணக்கே உள்ளது. துல்லியமாக கணக்கிடப்படவில்லை.)

2) தென்னையின் எண்ணிக்கை குறித்த புள்ளிவிவரம் இல்லாததால் சேதமடைந்த, அழிந்த மரங்களைக் கணக்கெடுக்க இயலாது.

3) தென்னைமரங்களின் எண்ணிக்கை தெரியாவிட்டால் வருங்கால அபிவிருத்தித் திட்டங்களை வகுக்க முடியாது. அத்துடன் மற்றைய பயிர்களைப் போல் ஒன்று அல்லது இரண்டு வருடங்களில் மரங்களை உற்பத்தி செய்ய முடியாது. தென்னை பயன் தர பத்து வருடங்கள் காத்திருக்க வேண்டும்.

4) தென்னைப் பயிர்ச் செய்கைக்கு திட்டம் வகுக்கும் போது 10 வருடங்களுக்குக் குறையாத காலப் பகுதியை கவனத்தில் எடுக்க வேண்டும். இத்திட்டத்தில் பத்து வருடங்களுக்குப் பின்வரும் நுகர்வோர் பெருக்கம், சந்தை வாய்ப்பு ஆகியவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### மரங்களின் எண்ணிக்கையை கணக்கெடுக்க ஒரு யோசனை

பெரிய தோட்டம், சிறிய தோட்டம், வீட்டுத் தோட்டம் எல்லாவற்றுக்கும் அழியாத மையினால் இலக்கம் இடவேண்டும். இது கட்டாயப் படுத்தப்பட வேண்டும். இதை தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மேற்பார்வை செய்ய வேண்டும். அடுத்து வரும் குடிசன மதிப்பீட்டின் (**Census**) போது இதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

5) யுத்தம் காரணமாகப் பல்லாயிரக்கணக்கான தென்னைகள் அழிந்துவிட்டன.

6) பெரும்பாலான மரங்கள் 50 வயதுக்குக் கூடியவை; அதனால் அவை பலன் தரும் காலம் இன்னும் சில ஆண்டுகளே.

7) பெரும்பாலான தோட்ட உரிமையாளர்கள் யாழ்.குடாநாட்டில் இல்லை. அதனால் சீரான பராமரிப்பு இல்லை. உரிமையாளரினால் தோட்ட பராமரிப்புக்கு நியமிக்கப்பட்டவர்கள், தோட்டத்தை அபிவிருத்தி செய்யாமல், பெறக்கூடிய இலாபத்தையே பெறக் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள், இதனால் தோட்டங்கள் நலிவடைகின்றன.

8) 1980 ஆம் ஆண்டுக்குப் பின்னர் புனர்நடுகைக்கு அரசாங்கம் வழங்கிய மானியம் யாழ். குடாநாட்டில் வழங்கப்படவில்லை.

ஏனைய மாவட்டங்களில் ஏக்கருக்கு 50,000 ரூபா ஐந்து வருடங்களுக்குப் பகிர்ந்து வழங்கப்பட்டது.

9) யுத்தத்தைக் காரணம் காட்டி பல வருடங்களாக உரம் சீராக வழங்கப்படவில்லை.

10) தென்னந்தோட்ட வேலை அனுபவம் பெற்ற தொழில் செய்வோர் இன்மை, உயர்ந்த கூலிச் செலவினங்கள், தோட்ட உரிமையாளரின் பணமுடை, உரம் இன்மை என்பனவற்றால் தோட்டப் பராமரிப்பு பலவீனமடைந்தது. தேங்காய் உற்பத்தி வீழ்ச்சி கண்டது. அதன் விலை ஏறியது. 1997ஆம் ஆண்டுக்குப் பின் தோட்டக்காரர்கள் விலையேற்றம் கண்டு அக்கறை காட்டி உற்பத்தியைப் பெருக்கினார்கள். ஆனால் சந்தைப்படுத்தும் வசதி இல்லாததால் தேங்காய்விலை பெரும் வீழ்ச்சிகண்டு, மீண்டும் தோட்டக்காரரை கஷ்டத்திற்கு உள்ளாக்கியது.

11) தேங்காயின் விலையேற்றம், தேங்காய் எண்ணெயின் விலையை உயர்த்தியது. இதன் காரணமாக 'பாம் ஓயில்' (**Palm Oil**) யாழ்ப்பாணச் சந்தையில் புகுந்தது. இது தேங்காய் எண்ணெய்க்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. பாம் ஓயில் விலை குறைவாக சந்தையில் இருந்தாலும், நாட்டுக்கு மிகத் தேவையான, அருந்தலான வெளிநாட்டுச் செலாவணியை விழுங்குகிறது. இது நாட்டுக்கு நல்லதல்ல.

12) தும்பு உற்பத்திக் குடிசைக் கைத்தொழிலுக்கு உதவுகிறது. தும்பு உற்பத்திக்கு பொச்சுமட்டையை நீரில் ஊறவைத்து கையால் அடித்து தும்பு தயாரிப்பதை விடுத்து நனைய வைக்காமலே இயந்திரங்களினால் தும்பு தயாரிக்க இயந்திரங்கள் உண்டு. ஆனால் அதை வாங்கும் வலு மக்களிடம் இல்லை. அதற்கு அரசு உதவவேண்டும்.

13) எண்ணெய் உற்பத்திக்கு இயந்திர சாதனங்கள் உண்டு. ஆனால் எண்ணெய் உற்பத்தியாளருக்கு எவரும் உதவுவதாக இல்லை. ஒரு லீற்றர் எண்ணெயைப் பெறுவதற்கு 2 கிலோ கொப்பறா தேவை. அதன் விலை 25 ரூபா. 1 கிலோ கொப்பறாவை எண்ணெ யாக்குவதற்கு 15 ரூபா தேவை. வடி கூலி 30 ரூபா. ஒரு லீற்றர் எண்ணெய்க்கு உற்பத்திச் செலவு 55 ரூபா. இன்றைய சந்தை விலை 40 முதல் 45 ரூபா உற்பத்தியாளருக்கு இது கட்டுபடியாகுமா?

14) தோட்ட மரங்களின் பசளைத் தேவைக்காக பெரும்பாலான தோட்டங்களில் மாட்டுப் பட்டி, ஆட்டுப்பட்டி வைத்திருப்பது வழக்கம். இப்போது அது அனைத்தும் அழிந்து விட்டன. அவற்றின் பெறுமதி பல லட்சம் ரூபா ஆகும். இனி முன்னரைப்போல பட்டிகளை அமைப்பது இயலாத காரியம். உழவுக்கான எருமை மாட்டிற்கும் அதோ கதி!

15) தோட்டங்களுக்கு வேலிகள் இன்றியமையாதவை. இன்று தோட்டங்களின் எல்லைகளைக் கண்டு பிடிப்பதே பெரும் பிரச்சினை. கண்டு பிடித்தாலும், அவற்றைச் சீர்செய்வதற்கு பெருந்தொகைப் பணம் தேவை. பெரும் தோட்டங்களின் நீள அகலம் எவ்வளவு, அவற்றுக்கான கம்பிக் கட்டைகள், முள்ளுக்கம்பி, 'ப' ஆணி, கதியால்கள் ஆகியவற்றுக்குப் பெரும்பணச்செலவு உண்டாகும். வேலி இல்லாமல் தோட்டத்தைப் பராமரிப்பது இயலாத காரியம்.

16) தோட்ட உபகரணங்கள் - நீர் இறைக்கும் இயந்திரம், மண்வெட்டி, கோடரி, கத்தி, அலவாங்கு, வண்டில், டிராக்டர் எல்லாம் தோட்டங்களில் இருந்து ஊழியர் வெளியேறிய பின்னர் தொலைந்து விட்டன.

17) இதுவரை தோட்டங்களில் தொழில் செய்த வேலைக்குப் பழக்கப்பட்ட தொழிலாளர்கள், இடம் பெயர்ந்து சிதறிப்போய் வாழ்கிறார்கள். சிலர் வேறு தொழில் பார்க்கிறார்கள். இவர்களை மீண்டும் ஒன்று சேர்த்து தோட்டங்கள் பயன்படுத்த முடியுமா என்பது சந்தேகத்திற்குரியதே.

18) தோட்டங்களுக்கு ஊடாக இராணுவக் காப்பரண்கள் கட்டப்பட்டுள்ளன. மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. அதனால் தோட்டத்திற்குள் போவதோ, உழுவதோ, உயிராபத்தாய் முடியும். காப்பரண்களை அழிக்கவேண்டிய காலங்களில் பெருந்தொகைப் பணம் தேவைப்படும். இதற்கான செலவை யார் ஏற்பது?

19) உரம் வாங்குவதற்காக வீடுகளை லட்சக்கணக்கில் வங்கிகளுக்கு அடமானம் வைத்து உரத்தை மண்ணில் புதைத்து விட்டு இப்போது தோட்டத்தையும் இழந்து விட்டு செய்வது அறியாது திகைத்து நிற்கும் உரிமையாளரை இச்சுமையிலிருந்து மீட்பவர் யார்? வங்கிகள் இவர்களைச் சும்மா விடுமா?

20) தென்னந்தோட்ட உரிமையாளருக்குத் தம்மைக் காப்பாற்ற ஒரு சங்கம் இல்லை என்பது வெட்கப் படவேண்டிய ஒன்று.

மேற்கூறியவற்றைக் கவனத்தில் கொண்டு யாழ்.குடாநாட்டிற்கு ஏற்படவிருக்கும் மாபெரும் பொருளாதார நட்டத்தை,சுயதொழில் வாய்ப்பின் அழிவை, நுகர்வோரின் தேவையை, குடிசைக்கைத்தொழிலுக்கான மூலப்பொருள்களின் தட்டுப்பாட்டை, இது காறும் இதை நம்பி வாழ்ந்த மக்களின் தொழில் வாய்ப்பைக் காப்பதற்கு நாட்டுப்பற்றுள்ள மனித நேயமுள்ள அனைவரையும் பணிவுடன் வேண்டுகிறோம். ●

| தோட்டப் பராமரிப்பு | தோட்ட உரிமையாளர்கள்: பணம் முதலீடு செய்து உற்பத்தியாக்கியவர்கள். | தோட்டக் கணக்கர்கள: வேலையாளகள், மேற்பார்வை தோட்டக் கணக்கு முழுப் பொறுப்பு | மாத ஊதியம் பெறும் தொழிலாளர்கள் | நாளாந்தச் சம்பளம் பெறும் வேலையாள்கள் | காவலாளிகள் |
|---|---|---|---|---|---|
| ஓலை | ஓலை வெட்டி அடுக்குபவர்கள் | ஓலை வாங்குபவர்கள்<br>1) வருடாந்த குத்தகைக்காரர்கள்<br>2) அன்றாடம் வாங்குபவர்கள | ஓலை ஏற்றிக் கொடுப்போர்<br>1) வண்டில்காரர்கள்<br>2) மினி டிராக்டர்<br>3) பெரிய டிராக்டர் | 1) கிடுகு பின்னி கூலி பெறுபவர்கள்<br>2) ஏற்றுபவர்கள்<br>3) வண்டில்காரர்கள்<br>4) மினி டிராக்டர்<br>5) பெரிய டிராக்டர் | 1) கிடுகு வியாபாரிகள்<br>2) தரகர்கள்<br>3) வீடு வேய்பவர்கள்<br>4) ஈர்க்குக் கிழிப்போர் (விளக்குமாறு உற்பத்தி) |
| தேங்காய் | 1) தேங்காய் பறிப்போர்<br>2) பொறுக்குபவர்கள்.<br>3) தேங்காய் தெரிபவர்கள்<br>4) ஏற்றுபவர்கள் | தேங்காய் கொண்டு செல்வோர்<br>1) வண்டில்<br>2) மினி டிராக்டர்<br>3) பெரிய டிராக்டர்<br>4) லொறி | 1) தேங்காய் வாங்குபவர்கள்<br>2) தரகர்கள்<br>3) மொத்த வியாபாரி<br>4) சில்லறை வியாபாரி | 1) தேங்காய் உரிப்பவர்கள்<br>2) பொச்சுமட்டை வியாபாரி<br>3) கொப்பறா அடிப்போர் | 1) சிரட்டைக்கரி உற்பத்தி, வியாபாரம்<br>2) இளநீர் வியாபாரம். |
| தேங்காய் எண்ணெய் | எண்ணெய் வடித்தல்<br>1) செக்கு<br>2) இயந்திரம் | எண்ணெய் வியாபாரி<br>1) மொத்த வியாபாரி<br>2) சில்லறை வியாபாரி | 1) எண்ணெயில் பலகாரம் போடுவோர்<br>2) சவர்க்காரம் செய்வோர் | 1) பிண்ணாக்கு வியாபாரம் செய்வோர்<br>2) கோழித்தீன் உற்பத்தி | |
| தேங்காய்த் தும்பு | தும்பு உற்பத்தியாளர்<br>1) கையால் அடித்தல்<br>2) இயந்திரம் மூலம் அடித்தல் | கயிறு உற்பத்தியாளர்<br>1) கையால் உற்பத்தி<br>2) இயந்திரம் மூலம் | கயிறு வியாபாரம்<br>1) மொத்த வியாபாரிகள்<br>2) சில்லறை வியாபாரிகள் | தும்புத்தடி செய்யும் குடிசைக் கைத்தொழில் | |
| கள் உற்பத்தி | கள்ளுக்கு மரம் கொடுத்து ஊதியம் பெறுவோர். | 1) சீவல் தொழிலாளி<br>2) விற்பனை நிலையத்திற்கு எடுத்துச் செல்வோர் | 1) கள்ளு விற்பனை நிலையத்தில் தொழில் புரிவோர்<br>2)கள் போத்தலில் அடைக்கும் தொழிற்சாலை. | 1) சாராய உற்பத்தி<br>2) போத்தலில் அடைத்தல<br>3)வியாபார நிலையத்திற்கு எடுத்துச் செல்வோர். | சாராய வியாபாரிகள் |
| தென்னம் பலகை. | தனியார் கல்வி நிலைய மேசை, வாங்கு செய்வோர். | பிரேதப் பெட்டி செய்வோர். | | | |

# அனைத்துத் தமிழ் மக்களின் அபிலாஷைகளையும் பிரதிபலித்து நின்றவர் குமார் பொன்னம்பலம்

**தமிழர்களின் உரிமைக்காக ஓங்கி ஒலித்துக் குரல் கொடுத்தவர் அமரர் குமார் பொன்னம்பலம். அவரது முதலாவது நினைவு தினம் இன்றாகும். கொழும்பில் நடைபெற்ற அவரது நினைவஞ்சலிக் கூட்டம் ஒன்றில் கொழும்புப் பல்கலைக்கழக சட்ட பீட சிரேஷ்ட விரிவுரையாளர் வி.ரி. தமிழ்மாறன் ஆற்றிய உரையின் தொகுப்பு இங்கு கட்டுரை வடிவில் பிரசுரமாகின்றது.**

ஒருவருடைய வாழ்க்கையை அவர் வாழ்ந்த தடத்தை பின்நோக்கிப் பார்க்கின்ற பொழுது, அதில் நாங்கள் பெருமைப்படுவதற்கு என்ன இருக்கின்றது? எப்பொழுதும் நாங்கள் பின்நோக்கிப் பார்ப்பது, நாங்கள் முன்னேறிச் செல்வதற்கான தடத்தைச் சரியாக அடையாளங் காண்பதற்காகவே. அந்த வகையில் அண்ணன் குமார் அவர்களுடைய வாழ்க்கையை ஒரு கணம் பின்நோக்கிப் பார்ப்பது இன்றைய தினத்தில் மிக அவசியமானது என்று நினைக்கின்றேன்.

குமார் அவர்களுடைய தந்தை யாருடைய அரசியல் இந்த நாட்டுக்குச் செய்திருக்கின்ற பங்களிப்பு என்ன? திரு.குமார் பொன்னம்பலம் அவர்களுடைய அரசியல் இந்த நாட்டுக்குச் செய்திருக்கின்ற பங்களிப்பு என்ன? அதற்கு அடுத்த தலைமுறையாக அவருடைய குடும்பத்திலேயிருந்து இந்த நாட்டுக்குச் செய்யப்படப்போகின்ற அரசியல் பங்களிப்பு என்ன என்பதைத் தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள்; ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், இந்த மூன்று தலைமுறையினருடைய பங்களிப்பை எடை போடுவதன் மூலம் - ஆய்ந்து பார்ப்பதன் மூலம் - இலங்கையிலே தமிழ் மக்களுடைய வரலாற்றை - தமிழ் மக்களுடைய அரசியல் வரலாற்றை - தமிழ் மக்களுடைய அரசியல் தடம் எத்திசையில் சென்று கொண்டிருக்கின்றது என்பதை எம்மால் அணுகிப் பார்க்க முடியும்.

ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்கள் 50ற்கு 50 கோரிக்கையை முன்வைத்த போது இந்த நாட்டின் ஆட்சியிலே - மத்திய அரசாங்கத்திலே- மக்களுடைய - சிறுபான்மை இனத்தினுடைய - உரிமையைக் கோரி நின்றார். அதாவது, மத்திய ஆட்சியிலே பங்கு கோரி நின்றார் அல்லது பங்கு கேட்டு நின்றார் என்று கூறலாம். அந்தக் காலம் மாறிப்போய் தமிழ் மக்கள் இந்த நாட்டின் ஒரு தேசிய இனம்; இந்த நாட்டின் மற்றைய தேசிய இனங்களுக்கு உரிய அதே அரசியல் உரிமைகளும் அபிலாசைகளும் தமிழ் இனத்திற்கும் உண்டு; அதனை மறுக்க முடியாது என்று இன்னொரு சகாப்தத்தில் - இன்னொரு தலைமுறையில் - அண்ணன் குமார் பொன்னம்பலம் அவர்கள் வலியுறுத்தி நின்றார். இன்றைக்கு அந்தச் சகாப்தம் முடிந்திருக்கின்றது. இதனுடைய அடுத்த கட்டம் என்னவாக இருக்கும் என்பதை நாங்கள் நினைவு கொள்ளத் தான் இன்றைய விழா - இந்த அஞ்சலி - எங்களுக்கு வழி செய்யப் போகின்றது.

தமிழ் மக்களுடைய அரசியல் பரிணாம வளர்ச்சியோடு ஒன்றித்து விட்ட - ஒன்றித்திருக்கின்ற - ஓர் அரசியல் தடம் தான் பொன்னம்பலம் குடும்பத்தினருடைய அரசியல் தடம் அல்லது அரசியல் வாழ்க்கை என்பதை நாங்கள் இங்கே அறிந்து கொள்ள முடிகின்றது. இம்மூன்று தலைமுறைகளின் காலத்தில் தமிழ் மக்களுடைய விருப்பத்தின் காரணமாகவோ, தமிழ் மக்களின் விருப்பத்திற்கு எதிரான சூழ்நிலைகளின் காரணமாகவோ எங்களுடைய அரசியல் - எங்களுடைய மக்களுடைய அரசியல் - தடம் மாறிப் போய்க் கொண்டு தான் இருக்கின்றது. ஆனால், அவற்றினுடைய விளைவுகள் எப்படி இருக்கப்போகின்றன? இந்த நாட்டினுடைய எதிர்காலம் எப்படி இருக்கப் போகின்றது? இந்த நாட்டிலே ஜனநாயகம் என்ற பெயரில் எத்தனை நாளைக்கு ஜனநாயகம் தழைத்திருக்கப் போகின்றது என்பது இன்றைக்குக் கேள்விக்குறியாகி இருக்கின்றது.

ஒரு மனிதனைச் சந்திக்கின்ற பொழுது, அம்மனிதன் உங்கள் மீது ஏற்படுத்துகின்ற தாக்கம்,அது என்றைக்கும் நிலைத்திருக்கக் கூடியதாக இருக்கின்றதா? அப்படி ஒரு தாக்கத்தை ஏற்படுத்துபவனாக ஒருவன் இருந்தால், அவனை ஒரு மாமனிதன் என்று நாங்கள் கொள்ளலாம். அதேபோல் அந்த மனிதனுடைய ஒரு செயல் அல்லது அந்த மனிதன் ஆற்றிய பணி இனி நடை பெறப் போகின்ற ஏனைய சம்பவங்கள் எல்லாவற்றையும் பாதிக்கப் போகின்றது என்று சொன்னால், அத்தகைய செயலை ஒருவன் செய்திருந்தால் அவனை நாங்கள் மாமனிதனாக ஏற்றுக் கொள்ளலாம். இந்த வகையில் இந்த இரண்டு வகையான செயல்களையும் செய்த, தன்னைச் சந்திக்கின்றவர்கள் மீது தன்னுடைய செல்வாக்கை - தன்னுடைய தாக்கத்தை- ஏற்படுத்திய ஓர் அரசியல் தலைவனாகவும், தன்னுடைய செயல்களின் மூலமும் தன்னுடைய பணிகளின் மூலமும் இந்த நாட்டின் அரசியல் வரலாற்றை, அரசியல் தலைவிதியை மாற்றி அமைக்கப் போகின்ற, அரசியல் இயல்புகளைப் பாதிக்கக் கூடிய பங்கையாற்றிய வீரபுருஷன் என்ற முறையிலும் வரலாற்றில் குமார் பொன்னம்பலம் அவர்களுடைய நினைவுகள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் என்பதில் ஐயமில்லை. அல்லது அதைக் கூற வேண்டிய - வலியுறுத்த வேண்டிய வாய்ப்பு அல்லது சந்தர்ப்பத்தை எங்களுக்குத் தருவதற்கு யாரிடமும் நாங்கள் கைகட்டியோ அல்லது வாய்ப்புக் கேட்டோ நிற்க வேண்டிய அவசியமும் இருக்காது என்று நினைக்கிறேன்.

அண்ணன் குமார் பொன்னம்பலம் அவர்களுடைய அரசியல் வாழ்க்கை, தமிழ் மக்களுடைய அரசியல் வாழ்க்கையோடு - தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகளோடு - பின்னிப் பிணைந்ததாக அமைந்து விட்டது. ஆகவே, ஒரு குமார் பொன்னம்பலம் மட்டும் தான் தன்னுடைய கருத்துக்களைப் பகிரங்கமாகச் சொன்னான்; ஒரு குமார் பொன்னம்பலம் தான் எதிர்ப்புக்களை நேரடியாகச் சந்திக்கத் திராணி உள்ளவனாக இருந்தான்; ஏனைய தமிழ் மக்களால் இது முடியவில்லையா என்ற கேள்வி பலராலும் எழுப்பப்படுகின்றது. அல்லது குமார் பொன்னம்பலம் அவர்கள் விட்டுச் சென்ற இடைவெளி எப்பொழுது நிரப்பப்படும் என்ற கேள்வி எழுப்பப்படத் தான் செய்கின்றது. ஆனால், குமார் பொன்னம்பலம் பிரதிபலித்து நின்றது தமிழ் மக்களு



டைய - அனைத்துத் தமிழ் மக்களுடைய - எண்ணத்தைத் தான். அனைத்துத் தமிழ் மக்களுடைய அபிலாஷைகளையும் தான் குமார் பொன்னம்பலம் என்ற ஒரு வடிவம் பிரதிபலித்து நின்றது.

பொதுவாகப் பெரியவர்கள் இறந்து விட்டால், நாங்கள் அஞ்சலி உரையாற்றுகின்ற போது சொல்வோம், ஒருவர் இறந்துவிட்டார் அல்லது அவருடைய உருவம் மறைந்து விட்டது; இவரைப் போல் இன்னும் ஆயிரம் பேர் பிறப்பார்கள் என்று அல்லது அத்தகையவர்கள் பிறப்பது தவிர்க்க முடியாதது என்று. இங்கு நான் ஏற்கனவே சொன்னேன், ஒருவனுடைய பணி - ஒருவனுடைய செயல் - அவனுக்குப்பின்னால் வரப்போகின்ற அத்தனை செயல்களையும் பாதிக்கக்கூடிய ஒரு செயலாக அமைந்திருந்தால் அவனை மாமனிதன் என்று சொல்லலாம் என்று. அந்த வகையில் ஒரு குமார பொன்னம்பலம் மறைந்து விட்டால் ஆயிரம் குமார் பொன்னம்பலங்கள் பிறப்பார்கள் என்று கூறி நாங்கள் பெருமைப்பட முடியாது. ஏனென்றால், பிறக்கப் போகின்றவர்கள் குமார் பொன்னம்பலங்கள் அல்லர் என்பதைத் தமிழ் மக்கள் நிச்சயமாக அறிந்திருக்கின்றார்கள். அதற்காகத் தான் பொன்னம்பலம் அவர்களுடைய சந்ததியில் மூன்றாவது தலைமுறையின் அரசியல் எப்படிப்பட்டதாக இருக்கப் போகின்றது என்ற கேள்வியை எழுப்பினேன். இந்தப் பரிணாம வளர்ச்சி தமிழ் மக்களை இட்டுச் சென்றிருக்கின்ற விதம் - தமிழ்த் தேசிய வாதம் அல்லது தமிழ்த் தேசிய வாதத்தின் ஒட்டுமொத்தப் பிரதிபலிப்பாக அண்ணன் குமார் பொன்னம்பலம் அவர்கள் அடையாளம் காணப்பட்ட விதம் - வரலாற்றினுடைய நெருக்கடியால் அல்லது வரலாற்றினுடைய நிர்பபந்தத்தால் ஏற்பட்ட ஒன்றாகும். தமிழ்த தேசிய வாதத்தினுடைய முனைப்பை அடக்கிவிட முடியாது என்பது நிச்சயமாக்கப்பட்ட பின்னர், அந்த முனைப்பினுடைய ஒட்டு மொத்தப் பிரதிபலிப்பாகக் குரல் கொடுத்துக் கொண்டிருந்த ஒருவனை, அதுவும் இந்த நாட்டிலே வாழ்கின்ற சிறுபான்மை இனத்தின் பிரதிநிதியாக, சிறுபான்மை இன மக்களுடைய இதயங்களில் அன்பினால் கொலுவாக வீற்றிருக்கின்ற ஒருவருடைய நினைவை அழித்து விடுவதன் மூலம் அந்த மக்களுடைய அபிலாஷைகளை - அரசியல் வேட்கைகளை அணைத்து விடலாம் என்று தப்புக் ,கணக்குப் போட்டார்கள்.

திருக்குறளிலே அமைச்சரவை பற்றிக் குறிப்பிடுகின்ற பொழுது-

*"பழுது எண்ணும் மந்திரியின்*
*பக்கத்துள் தெவ்வோர்*
*எழுபது கோடி யுறும்"*

எனக் கூறப்படுகின்றது. அதாவது, பழுது பண்ணக்கூடிய ஆலோசனைகளையே கூறிக் கொண்டிருக்கின்ற அமைச்சரவையைக் கொண்டிருப்பதை விட, எழுபது கோடி எதிரிகள் மத்தியில் வாழ்வது நன்மையுடையது என்பதாகும்.

திருக்குறளிலே நாட்டைப்பற்றிக் கூறுகின்ற பொழுது -

*"பல்குழுவும் பாழ்செய்யும் உட்*
*பகையும் வேந்தலைக்கும்*
*கொல் குறும்பும் இல்லது நாடு"*

எனக் கூறப்படுகின்றது. அதாவது, எந்தவித இலட்சியங்களுக்காகவும் அல்லது எந்தவித அரசியல் கொள்கைகளுக்காகவும் தங்களை அர்ப்பணிக்கின்ற அல்லது ஒரு சித்தாந்தத்தின் அடிப்படையில் நிற்காத பல்வேறு குழுக்களையும், உள்ளுக்குள்ளேயே இருந்து கொண்டு சதி செய்கின்ற உட்பகையினையும், அங்குமிங்கும் அலைக்கழிக்க வல்ல சிற்றதிகாரம் கொண்டிருக்கின்ற அந்தத் துரும்பர்களையும் கொண்டிராதது தான் நாடு என்று அதில் கூறப்பட்டிருக்கின்றது. அப்படி இல்லாததான ஒரு நாட்டிலே இருந்து கொண்டு தன்னுடைய மக்களுக்காக, அந்த மக்களுடைய அபிலாஷைகளைத் தன்னுடைய ஏக குரலில் - தன்னுடைய தனிக் குரலில் - வெளிப்படுத்திய ஒரு மாமனிதன் மறைக்கப்பட்டுவிட்டான். ஆனால், இது அவருடைய இலட்சியப் பயணத்தை - அவர் எந்தத் தடத்தில் தமிழ் இனம் செல்ல வேண்டும் என்று கனவு கண்டாரோ, அந்த இலட்சியப் பயணத்தை - தடை செய்வதாக இருக்கமுடியாது என்பதற்காகத் தான் இனிப் பிறக்கப் போகினறவர்கள் எப்படி இருப்பார்கள் என்பதை நான் குறிப்பிட்டேன். ★

# 2 ஆயிரம் குடும்பங்கள் வன்னியில் புயலால் பாதிப்பு

வவுனியா,ஜன.5

அண்மையில் ஏற்பட்ட கடும் புயலினால் வன்னிப் பகுதியில் 2 ஆயிரத்து 10 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 238 குடும்பங்களும் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 907 குடும்பங்களும், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 365 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் கரைச்சி மற்றும் பூநகரிப் பகுதிகளில் 411 வீடுகள் முற்றாக அழிந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-10)

# புலிகள் மீதான தடையை எதிர்த்து அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம்

நியூயோர்க்,ஜன.5

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு அமெரிக்கா விதித்துள்ள தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்கு வாழும் தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று முன்தினம் நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தடை உத்தரவு அமெரிக்காவின் அரசமைப்பு விதிகளுக்கு முரணானது எனவும் புலிகள் அமைப்பின் அடிப்படை உரிமையை மீறும் நடவடிக்கை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடை உத்தரவை அமெரிக்க அரசு உடனடியாக நீக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-6-10)

# முதலாம் ஆண்டு நினைவு தினம்

## 05-01-2001

கனடாவில் கனடா அரசாங்கத்தின் அனுமதியுடனும் அங்கீகாரத்துடனும் வெளியிடப்பட்ட மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த தபால் தலை வெளியீடு. கனடாவில் இதன் பெறுமதி 46 சதம்.



முதல் முத்திரை 3000 (மூவாயிரம்) கனடியன் டொலருக்கு விற்பனையானது. அன்று முத்திரைகள் விற்பனையான பணம் முழுவதும் கனடாவில் உள்ள தமிழ் வைத்திய பணிமனைக்கு அனுப்பப்பட்டது.

### மாமனிதர் குமார் பொன்னம்பலம்

(ஜீ. ஜீ. பொன்னம்பலம். - யூனியர்)

கல்விச் செல்வம், பொருட்செல்வம், வீரம், துணிவு, புகழ், "அடிசிற்கினியாளே அன்புடைய மாதே படி சொற்தவறாத பாவாய்" என்ற கூற்றுக்கமைய நடந்து கொண்ட துணைவியார் (டாக்டர்), புலிக்குப் பிறந்தது .பூனையாகுமா? என்பதற்கமைய, கல்வி, துணிவு, தந்தை தாய் சொற்கேட்டு நடந்த, நடக்கும் இரு (ஆண்-**Barrister,** சட்டத்தரணி; பெண்-டாக்டர்) பிள்ளைகள், கல்வி, பொருட்செல்வங்கள் கொண்ட ஒரேயொரு சகோதரி (டாக்டர்), தேக சுகம் ஆகியவை அத்தனையும் கடவுளால் கொடுக்கப்பட்டு, இலங்கையில் மட்டுமல்ல வேறு எந்நாட்டுக்குச் சென்றும் சுகபோக வாழ்க்கை வாழக்கூடிய வசதியும் இருந்தும், அத்தனையும் மறந்து தமிழ் பேசும் இனத்தை அடக்கி ஒடுக்குவதைத் தான் தமிழனாக இருந்து பொறுக்க முடியாத காரணத்தினால் சாவரக்கன் தன்னை நெருங்கி விட்டான் என்று தெரிந்தும், தன் உயிருக்கு அஞ்சி தனது கொள்கையில் பின்வாங்கி அடி பணியாது, எவ்வித ஆயுதமும் துணையும் இன்றி, சிங்கத்தின் குகைக்குள் தனிமனிதமாக நின்று பகிரங்கமாகத் தமிழ் பேசும் இனத்திற்காகவும், நமது இனத்திற்காக போராடும் இளைஞர்களுக்காகவும் குரல் கொடுத்த மாமனிதனை நாம் இன்று நினைவு கூருவதுடன் நாம் மறக்காமல் என்றும் நினைவு கூருவோமாக.

அன்னாருக்கு இலங்கையிலும் வெளிநாடுகளிலும் நினைவு மலர்கள் வெளியிட்டு நினைவாஞ்சலிக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, நடத்தப்பட்டுக் கொண்டிருப்பதுடன் கனடாவில் வெளிநாட்டவரான அன்னாருக்கு நினைவு முத்திரை வெளியிட்டதென்றால் அன்னார் செய்த அரும் பெரும் தியாகமே. அவர் செய்த தியாகம் அன்னாரின் ஆன்மா சாந்தி அடைய ஆண்டவன் துணைபுரிய நாம் பிரார்த்திப்போமாக.

*45, பனாண்டோ வீதி,*
*வெள்ளவத்தை,*
*கொழும்பு.*

அன்னாரின் நினைவை என்றும் மறவாதவர்களில்
ஒருவரான
**க.மு.தர்மராசா.**

(82450)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இலக்கியக் கட்டுரைகள்

10-11ஆம் தரங்களில் விருப்பப் பாடமான தமிழ் இலக்கியத்தைக் கற்கவும் கற்பிக்கவும் உதவக்கூடிய 38 கட்டுரைகள், 325 நாடகங்களும் 50 சிறுகதைகளும் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் இலக்கிய விமர்சன நூல். (82413)

## விற்பனைக்கு

மர யன்னல்கள், கதவுகள் பலகைகள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 73,பழம்வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (82448)

யாழ். இந்துக்கல்லூரி வீதியில் 4 பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கருணா இல.586, கே.கே.எஸ் வீதி, (நாச்சிமார்கோயிலுக்கும் தட்டாதெருவுக்கும் இடையில்) யாழ்ப்பாணம் . (82537)

தமிழ் தட்டச்சு, றோணியோ இயநதிரம் என்பன எம்மிடம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.34, சேர் பொன்.இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (82531)

வீடியோ கமரா பனசோனிக் **N.V. 3500,** வீடியோ மிக்ஷர் பனசோனிக் **A.V. 55,** டெக் வகைகள் **L-15, S.D. 225, G-10,** ஜெனரேற்றர் றொபின் **1200W,** என்லாஜர் **B/W** என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: யோகா, **78, K.K.S** வீதி, சுன்னாகம். (82516)

**Aiwa-50W, Double Auto Reverse MECHANIAM Stereo Cassette Recorder Double door- Made in Japan, Super Set Telephone, Electric** கேற்றல், **Alder Type Writer "12"** விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **T.J.** தனரஞ்சன், இல.3, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். **T.P.No-3289,** சிவில் **Office** அருகில். (82519)

## புறொயிலர் விற்பனைக்கு

சுத்தம் செய்யப்பட்ட **BAIRAHA FARM** புறொயிலர் இறைச்சிக் கோழி, **CHICKEN SAUSAGES, CHICKEN MEAT BALLS** எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 145, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். **T.P** 2868. (81780)

## பொருளியல்

சர்வதேச வர்த்தகம், பணம், பொதுப் பொருளாதாரம், பொருளியல் வினா-விடை மற்றும் நூல்கள் யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி ஆகிய இடங்களில் விற்பனையாகின்றன. ஆசிரியர்: வே.கருணாகரன். (82527)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1971ஆம் ஆண்டு பிறந்த, நட்சத்திரம் அத்தம்,உதயத்தில செவ்வாய்க் குற்றமுள்ள, லண்டனில் சுப்பர் மாக்கற் வைத்திருக்கும் மணமகனுக்கு படித்த, அழகிய, உயரமான, நற்பண்புள்ள மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: திரு. வி. தனபாலசிங்கம், 22, றக்கா ஒழுங்கை, சுண்டிக்குளி. (82270)

## தவறிவிட்டது

மாதகல் விபுலானந்த வீதியைச் சேர்ந்த கணேசரத்தினம் இளமுருகன் என்பவருடைய தே.அ.அ. (இல. 812412760V),வி. அ. அட்டை(இல.090 5024675) ஆகிய இரண்டும் மாதகலுக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் 02-01-2001 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைத்துதவவும்.(82539)

## விடைத்தாள் திருத்தும் பணி ஆரம்பம்

ஜி.சீ.ஈ (சா/தரம்) விடைத்தாள்கள் திருத்தும் பணி நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளது. வேம்படி மகளிர் கல்லூரி மற்றும மத்திய கல்லூரியில் இப்பணி நடைபெற்று வருகின்றது. கடந்த முறையிலும் பார்க்க இம்முறை கணித, விஞ்ஞான பாட வினாத்தாள்கள் திருத்தும் பணிக்கு அதிக ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். (ஐ-86)

## கலந்துரையாடல்

வேலணை,ஜன.5

வேலணைப் பகுதியில் மாட்டிறைச்சிக்கடை ஆரம்பிப்பது தொடர்பாக அப்பகுதி மக்களின் அபிப் பிராயங்களை கேட்டறியும் பொருட்டு சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் பொதுஸ்தாபனங்கள் என்பனவற்றின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு வேலணை பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் நடைபெறும். (ம-167)


# ENGLISH
SPOKEN AND GRAMMAR

புதிய பிரிவு

ஆரம்பம்: 06.01.2001

நேரம்: 11.00
(பழைய நேரம்)

வகுப்பு: சனி, ஞாயிறு
இடம்: கொக்குவில்
(ஞானபண்டிதர் பாடசாலைக்கு அருகில்) (C/14629)



# மாபெரும் மலிவு விற்பனை

*பாடசாலை மாணவர்களின் நலன் கருதி*
- அப்பியாசக் கொப்பிகள்
- பாடசாலை உபகரணங்கள்

சேவை நோக்கில் மலிவு விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இடம்:- *புனித மரியன்னைப் பேராலயம்*
(ஆயர் இல்லம் முன்பாக)

காலம்:- **01.01.2001 - 20.01.2001 வரை.**

*இளைஞர் உருவாக்கல் இயக்கம் யா/பேராலயம்.*

விளம்பர அன்பளிப்பு:-
**லிங்கநாதன் அன்கோ**
*நவீன சந்தை, யாழ்ப்பாணம்.* (82541)



ஓம் ஸ்ரீ ராம ஜெயம்

# வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

சுவர்க்கவாயில் ஏகாதசி உற்சவம் -06-01-2001
சுவர்க்கவாயில் தரிசனம் காலை - 6.30
ஏகாதசி உற்சவம் வசந்த மண்டப பூஜை - மாலை 6.00 மணி
இரவு 8.00 மணி தொடக்கம் மறுநாள் (07-01-2001) அதிகாலை 4.00 மணி வரை
இசை நிகழ்ச்சிகளும் சொற்பொழிவுகளும் நடைபெறும்.
07-01-2001 காலை 6.30 மணிக்கு துவாதசி உற்சவம் நடைபெறும்

(82535) **- ஆதீன மகாசபை.**



# PATRICIAN INSTITUTES
# பற்றீசியன் தொழிற் பயிற்சி நிறுவனங்கள்

**தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன**

**ஆரம்பம்: 10-01-2001**

**1. i) A) DIPLOMA IN INFORMATION TECHNOLOGY** — **DURATION 8 MONTHS**

**B) DIPLOMA IN MS OFFICE** — **DURATION 6 MONTHS**

**C) O/L** சித்தியடைந்த மாணவர்களுக்கான விசேட கணனிப் பயிற்சித் திட்டம்

**ii) CERTIFICATE COURSES:-**

**1) MS WORD - 2000**
**2) MS EXCEL - 2000**
**3) MS ACCESS - 2000**
**4) MS POWER POINT**
**5) Visual Basic VR. 6**
**6) PASCAL**
**7) d Base**
**8) LOTUS 1-2-3**
**9) Page Maker**

**DURATION 3 MONTHS EACH**

மாணவர்களே!

இன்றைய அறிவுசார் சமுதாயத்தை எதிர்கொள்ளத்தக்க வகையில் தேவையான கணனிக் கல்வியை கூடிய செய்முறை வகுப்புக்களுடனும், போதிய வசதிகளுடனும் நீங்கள் நாட வேண்டிய ஒரே நிறுவனம் எமது நிறுவனம் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

**2) SHORT HAND & TYPING (ENGLISH)**
ஆங்கில சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் — **DURATION 6 MONTHS**

**3) SHORT HAND & TYPING (TAMIL)**
தமிழ் சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் — **DURATION 6 MONTHS**

**4) GENERAL MOTOR MECHANISAM**
மோட்டார் வாகனம் திருத்துதல்
**(Petrol & Diesel** வாகனங்கள்) — **DURATION 6 MONTHS**

**5) GENERAL ELECTRICIAN**
ஜெனரல் எலக்ரிஷன்
**(Wiring & WINDING)** — **DURATION 6 MONTHS**

**6) RADIO & T.V.REPAIRING** — **DURATION 8 MONTHS**

**7) LATHE MACHINE OPERATION**
கடைச்சல் இயந்திர தொழிற்பயிற்சி — **DURATION 3 MONTHS**

**8) ARC WELDING**
மின் ஒட்டுநர் பயிற்சி — **DURATION 3 MONTHS**

**9) CARPENTRY**
மரவேலை **(With Use of Machinary)** — **DURATION 6 MONTHS**

**10) REFRIGERATION AND AIR CONDITIONING** — **DURATION 6 MONTHS**

(7,8,9, பயிற்சிநெறி மாணவர்களுக்கு **ON THE JOB TRAINING** வழங்கப்படும்.)

**Note:**
1) பயிற்சிக் கட்டணங்களை தவணை முறையில் செலுத்தலாம்.
2) வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் போதிய ஆதாரம் காட்டி பங்குக்குருவானவரின் **(Parish Priest)** சிபார்சின் பெயரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெற்றுக் கொள்ளலாம்.
3) இந்த நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும்.
4) பயிற்சிநெறிகள் சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**PRODUCTION AND REPAIRING ON ORDER...!**
**கட்டமைத்தலும் திருத்துதலும்.**

சகல விதமான இரும்புசார் உற்பத்திப் பொருள்களும் ஒட்டு வேலைகளும் மரத் தளபாடங்களும் உறுதியான தொழில்சார் அறிவு மூலமும் ஓடருக்கு மிக விரைவாகவும் திறமையாகவும் செய்து கொடுக்கப்படும். அத்துடன் FRIDGE, WATER PUMPS, ELECTRICAL பொருள்கள் சம்பந்தமான சகல வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

**வாகனத் தகுதிச் சான்றிதழ் - 2001**
**FITNESS CERTIFICATE FOR MOTOR VEHICLE**

2001 ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் எமது நிறுவனத்தினால் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதனை சகல வாகன உரிமையாளர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் மோட்டார் சைக்கிள்களுக்கான **ENGIN No.** பொறித்துக் கொடுக்கப்படும்.

**VACANCY**
**TAMIL SHORT HAND & TYPING INSTRUCTOR**
**தமிழ் தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும் போதனாசிரியர்.**
(ராமலிங்கம் முறை)

மேற்படி பதவிக்குச் சிறந்த தகைமை உள்ளவர்கள் உடன் சான்றிதழ்களுடன் தொடர்பு கொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு:-
***REGISTRAR,***
***PATRICIAN INSTITUTES,***
***59, ST. PATRICKS ROAD, JAFFNA.***

(C/14639)

# புலிகள் மீதான தடையை நீக்கி அமைதிக்கு இந்தியா உதவட்டும்

## வை. கோபாலசாமி வலியுறுத்தல்

சென்னை, ஜன. 5



விடுதலைப் புலிகள் மீது இந்தியாவில் விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டும். அப்போது தான் இலங்கை இனப்பிரச்சினைக்குத் திர்வு காணும் விடயத்தில் இந்தியா பங்காற்ற முடியும்.

நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த அறிவிப்பை வெளியிட்ட பின்னரும் இலங்கை இராணுவம் தனது இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்து செல்வதும் —

தமிழர்கள் அழிக்கப்படுவதும் —

சிங்கள அரசின் சுயரூபத்தை சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்தி உள்ளன.

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த நாட்டில் அமைதியை ஏற்படுத்த இலங்கை அரசுக்கு மத்திய அரசு அழுத்தமும்நிர்ப்பந்தமும்கொடுக்கவேண்டும்.

இதுவரை காலமும் புலிகள் தான் தேவையற்ற விதத்தில் அரசுடன் சண்டையிட்டு வருகிறார்கள். சந்திரிகா அரசு தான் நாட்டின் சமாதானத்திற்காக பாடுபடுகின்றது என்று கூறிக்கொண்டிருந்தவர்கள் தற்போது உண்மை நிலைமையை உணருவார்கள்.

பலஸ்தீனர்களின் பிரச்சினைகளிலும் ஐரிஸ் மக்களின் பிரச்சினைகளிலும் தலையிட்டு சமாதானத்தை ஏற்படுத்த முன்னிற்கும் சர்வதேச சமூகம் இலங்கையில் மட்டும் கடந்த பல வருடங்களாக அப்பாவித்தமிழ் மக்கள் கொலை செய்யப்படுவதைக் கண்ட பின்னரும் மௌனமாக இருப்பது ஏன் என்று எனக்குப் புரியவில்லை.

நோர்வேயின் அமைதி முயற்சிகள் முன்னெடுக்கப்படும் இந்த நேரத்தில் இலங்கை அரசும் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பை ஏற்று பேச்சு வார்த்தையில் ஈடுபட வேண்டும். இதனை அந்த அரசுக்கு இந்திய அரசு தான் புரிய வைக்க வேண்டும்

கடந்த காலங்களில் நடைபெற்ற சில கசப்பான விடயங்களை மறந்து இந்திய அரசாங்கம் விடுதலைப் புலிகள் மீது விதித்துள்ள தடை உத்தரவை நீக்க வேண்டும். இவ்வாறு தடையை நீக்கினால் தான் இலங்கையில் அமைதியை ஏற்படுத்தவும் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கும் இந்தியா பங்காற்ற முடியும்.

இதே வேளை —

தேசிய ஜனநாயக கூட்டணியின் முடிவுக்கு நான் கட்டுப்படுகிறேன். இலங்கை இனப்பிரச்சினையைப் பொறுத்த மட்டில் மத்திய அரசுக்கு எந்த விதமான தர்மசங்கடத்தையும் ஏற்படுத்த விரும்பவில்லை.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

(ப-6)

### வாய்த் தர்க்கத்தால் உருவாகிய

# இந்தோனேசியக் கலவரத்தில் 7 பேர் உயிரிழப்பு; பலர் காயம்!

ஜகார்த்தா, ஜன. 5

இந்தோனேசியாவில்வாய்த் தர்க்கம் இனக்கலவரமாக மாறியதில் 7 பேர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்தனர்.

சுலாவசித் தீவில் உள்ள ஒரு கிராமத்தில்புத்தாண்டையொட்டி விளையாட்டுப் போட்டி ஒன்று நடத்தப்பட்டது.

இந்தப் போட்டியில் இரு இனங்களைச் சேர்ந்த இளைஞர்கள் அணிகள் கலந்து கொண்டன.

போட்டியின் போது வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த இரு இளைஞர்களிடையே பிரச்சினை காரணமாக வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இந்தச் சிறிய தகராறு இரு இனங்களிடையேயான இனக் கலவரமாக மாறியது

புத்தாண்டுக்குமுதல்நாளில் தொடங்கி 3 நாள்களாகத் தொடர்ந்த கலவரத்தில் 7 பேர் உயிரிழந்தனர்; பல லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் தீ வைக்கப்பட்டும் சேதமாக்கப்பட்டும் அழிந்துள்ளன.

தற்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் உள்ளதாகவும் கண்காணிப்புப் பணிகளை தீவிரப்படுத்தியுள்ளதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

(ஒ-6-10)

உதய அரங்கம்

## சூட்டுக் கொலை

இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் மக்கள் சேனை என்ற அமைப்பினர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரைச் சுட்டுக்கொன்றனர். இறந்தவர்கள் உயர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படுகிறது.

இவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களை தமது நிலத்தில் இருந்து குடியெழுப்பியதாலேயே கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## சிங்கப்பூரில் பட்டாசுக்குத் தடை

சிங்கப்பூரில் பட்டாசு வெடிப்பதற்குள்ள தடையை மக்களுக்கு நினைவூட்டப் பொலீஸார் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

பட்டாசுவெடிப்பது சட்டப்படி குற்றம் என்றும் இதனை மீறுபவர்களுக்கு 10 ஆயிரம் வெள்ளி அபராதம் அல்லது 2 வருடச் சிறைத் தண்டனையாக வழங்கப்படும் என்றும்— சிங்கப்பூர் பொலீஸார் அறிவுறுத்தி வருகின்றனர்.

# ஜேர்மனியில் முதல் தடவையாக இராணுவத்தில் பெண்கள்

ஜேர்மனிய இராணுவத்தில் முதன்முதலாகப் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இராணுவப் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சியை முடித்துக் கொண்ட இராணுவத் தொண்டர்களாக வெளிவந்துள்ள 244 பெண்களில் அதிக எண்ணிக்கையானோரை இராணுவத்திலும், சிலரை விமானப்படை மற்றும் கடற்படையிலும் சேர்த்துக் கொள்ள முடிவு செய்துள்ளதாகப் பாதுகாப்புத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியில் பல ஆண்டுகளாக படைகளில் பெண்களைச் சேர்க்கத்தடை இருந்து வந்தது.

கிழக்கு ஜேர்மனியும், மேற்கு ஜேர்மனியும் இணைந்து ஒரே நாடாகிய பின்னர் வேலை இல்லாத் திண்டாட்டம் வழக்கத்திலும் பார்க்க அதிகரித்திருந்தது.

இதனால் பெண்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தும் முயற்சியாக இராணுவத்தில் அவர்களைச் சேர்க்க அரசு முடிவு செய்தது.

### மேற்காசிய வன்செயலுக்கு முடிவுகட்டும்

# அமெரிக்காவின் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்க அரபாத் உறுதி

வாஷிங்ரன், ஜன. 5

மேற்காசிய வன்செயல்களை முடிவுக்குக் கொண்டு வரும் அமெரிக்காவின் முயற்சிகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக பலஸ்தீனத் தலைவர் யசிர் அரபாத் உறுதியளித்துள்ளார்.

அமெரிக்காவில் அதிபர் பில்கிளின்ரனுடன் நடத்திய பேச்சின் போதே அவர் இதனைக் கூறியதாக வெள்ளை மாளிகைப் பேச்சாளர் தெரிவித்தார்

மேற்குக் கரை மற்றும் காஸாப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் வன்முறை மோதல்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஒத்துழைப்பை உடனடியாகத் தொடங்கப் போவதாகவும்,

வன்செயலுக்குக் காரணமானவர்களைக் கைது செய்யத் தமது தரப்புத் தயாராக உள்ளதாகவும் அரபாத் மேலும் கூறியதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

அமைதி யோசனைகள் குறித்து கிளின்ரன் தெரிவித்துள்ள பரிந்துரைகளை அரபாத் ஏற்றுக் கொண்டாரா என்பது தொடர்பாக



அதிகாரி கருத்துத் தெரிவிக்க மறுத்து விட்டார்.

அமெரிக்காவுக்கான பலஸ்தீனப்பிரதிநிதி ஹஸன் அப்துல் ரஹ்மான் இது தொடர்பாகக் கூறுகையில், கிளின்ரனின் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ள தமது தரப்புத் தயாராக உள்ளதாகவும், ஆனால் சில நிபந்தனைகள் பற்றி அமெரிக்கா முதலில் விளக்கமளிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இதற்கிடையில், அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனுடன் மேற்காசியப் பிரச்சினை தொடர்பாகப் பேச்சுக்களை முடித்துக் கொண்ட யசிர் அரபாத் நேற்றுத் தாயகம் திரும்பியுள்ளார்.

(ஒ-6-10)

## நெதர்லாந்தில் தீ விபத்து

நெதர்லாந்தில் உணவு விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒரு மாணவி உட்பட 9பேர் உயிரிழந்தனர்.

சுற்றுலா நகரான வொலண்டனில் உணவு விடுதியில் கல்லூரி ஒன்றின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட புத்தாண்டுக் கொண்டாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது தீப்பற்றிக் கொண்டது.

இந்த விபத்தில் இறந்தவர்கள் 13—22 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் —

180பேர் வரை மோசமான தீக்காயங்களுக்கு உள்ளாகியதாகவும் கூறப்படுகிறது.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திரு. முருகேசு பாக்கியநாதன்

அவர்கள் பனை அபிவிருத்திச்சபை தலைவராக மீண்டும் நியமனம் பெற்றதையிட்டு எமது சங்கத்தின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவராக நியமனம் செய்த
ஈ.பி.டி.பியின் கௌரவ செயலாளர் நாயகமும்,
வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு, தமிழ் விவகார
இந்து அலுவல்கள் கலாசார அமைச்சருமான

கௌரவ அமைச்சர்

### கே. என். டக்ளஸ் தேவானந்தா

அவர்களுக்கு எமது சங்கத்தின் சார்பில்
நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
மானிப்பாய் பனை தென்னை வள
(82551) அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது வலி. வடக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்
செல்வி மரியவசந்தி அருளானந்தம்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி சந்திரபூமலர் அருளானந்தம்

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

வலி. வடக்கு பிரதேச செயலரும்,
(82557) சக உத்தியோகத்தர்களும்.

## ஓராண்டு நினைவஞ்சலி

| தாயின் மடியில் | ஆண்டவன் அடியில் |
| --- | --- |
| 17 — 10 — 1959 | 19 — 12 — 1999 |

### திருமதி சிவகலா விக்னேஸ்வரன்

(சாந்தா)

திதி: சுவர்க்க வாயில் ஏகாதசி (5-1-2001)

அன்பின் திருவுருவே நீர்மறைந்து
ஓராண்டு ஆனதுவோ!
ஆண்டவன் உனை அழைத்த போது
என்ன நினைத்தாயோ! அன்பே
உன் உறவுகள் ......... முடியவில்லை
ஆண்டவனை வேண்டுகிறேன்
உன் அருள்தா எனக்கு.
சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்புடன் உன் கணவன்
ஐ. விக்னேஸ்வரன்.

கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

(82558)

# சிறுபான்மைக் கட்சிகள் அரசுக்கு வழங்கும் ஆதரவைவிலக்கவேண்டும்

## சந்திரசேகரன் எம். பி. அறைகூவல்

கொழும்பு, ஜன. 5

தமது சொந்த இனத்துக்கே குழி தோண்டுகின்ற வேலையைச் செய்வதைத் தவிர்ப்பதற்காக அரசுக்கு வழங்கி வரும் ஆதரவை சிறுபான்மை இன நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரசை ஆதரிக்கும் சகல கட்சிகளும் விலக்கிக் கொள்ளவேண்டும்.

மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ. சந்திரசேகரன் நேற்று விடுத்த பத்திரிகைச் செய்தி ஒன்றில் இவ்வாறு அறைகூவல் விடுத்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாடு யுத்தத்தால் சீரழிந்து கொண்டிருக்கின்றது, சமாதானத்துக்கான அனைத்துச் சந்தர்ப்பங்களும் அரசின் தெளிவற்ற கொள்கையால் தடுமாறுகின்றன —

நாட்டுக்கும் குறிப்பாக சிறுபான்மை மக்களுக்கும் அழிவை உண்டாக்கும் நிகழ்வுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இதுவரை பதவியிலிருந்த அரசாங்கங்களிலேயே நாட்டின் சொத்தை அநியாயமாக அழித்துக் கொண்டிருப்பது இந்த அரசாங்கமே.

என்றுமில்லாதவாறு அரசிலுள்ள எம்.பிக்களில் பெரும்பான்மையானோருக்கு அமைச்சர் பதவிகளைக் கொடுத்து அரசு நிதியை விரயமாக்குவதும் இந்த அரசாங்கமே.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கு எந்த ஓர் உபயோகமான பொருளாதாரத் திட்டமும் இந்த அரசாங்கத்திடம் இல்லை, இதனால் விலைவாசியும் வாழ்க்கை செலவும் கூடிக்கொண்டு போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே எந்த ஓர் அர்த்தமும், நியாயமும் இன்றி அரசாங்கத்துக்கு ஆதரவளித்துக் கொண்டிருக்கும் சகல சிறுபான்மை இன நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசுக்கு ஆதரவளித்து வரும் கட்சிகளும் தாம் அரசுக்கு அளித்து வரும் ஆதரவைவிலக்கிக் கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது.

இவ்வாறு அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வரட்சி பாதிப்பு விவரம் வலி. மேற்கில் சேகரிப்பு

மூளாய், ஜன. 5

வலிகாமம் மேற்கில் வரட்சி காரணமாக விவசாயம் பாதிக்கப்பட்டவிவசாயிகளின் விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

பெரும்போக நெற்செய்கையின்போது போதியளவு மழை பெய்யாததனால் பெரும் பாதிப்புக்களை விவசாயிகள் சந்தித்துள்ளனர். இவ்வாறு பாதிக்கப்பட்டவிவசாயிகளின் விவரங்கள் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன

இப்பகுதிப் பெரும்பாக உத்தியோகத்தரின் பணிப்பின் பேரில் சகல விவசாயசம்மேளனங்களும் இவ்விவரம் திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளன. (ம—99)

## வலைப்பந்தாட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்படும் 2000 ஆம் ஆண்டுக்கான வலைப்பந்தாட்டச்சுற்றுப்போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 8-30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான அணி ஒழுங்குத் தெரிவு நாளை சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டிகளில் பங்கு பற்ற விண்ணப்பித்த வலைப்பந்தாட்டக்கழகங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் நாளை யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு தவறாது சமுகமளிக்குமாறு யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத் தலைவர் கோரி உள்ளார். (ம-6)

## 161 தபால் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம், ஜன. 5

நேற்று முன்தினம் காங்கேசன்துறைக்கு வந்துசேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 161 தபாற் பொதிகள் எடுத்து வரப்பட்டன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 90 தபாற் பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டன.

தபால்கள்யாவும் தரம்பிரிக்கப்பட்டு இன்று விநியோகம் செய்யப்படவுள்ளதாக யாழ். பிரதம தபாலதிபர் தெரிவித்தார். (ம-10)

## பயிலேடுகள் எடுத்து வரப்பட்டன

யாழ்ப்பாணம், ஜன. 5

தேசிய கல்வி நிறுவகத்தின் யாழ். பிராந்திய நிலையங்களில் பட்டப்பின் கற்கை நெறியை மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்கான பயிலேடுகள் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளரால் அண்மையில் எடுத்து வரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்துக்கென நீண்டகாலத்துக்குப் பின்பு எடுத்து வரப்பட்ட இந்தப் பயிலேடுகள் யாழ். இந்துக் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றில் இயங்கும் தேசிய கல்வி நிறுவகத்தின் பிராந்திய நிலையங்களுக்குப் பொறுப்பான முதுநிலை விரிவுரையாளர்களிடம் அடுத்த வாரம் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக மேலதிக மாகாண கல்விப் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-10)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு விவசாய ஊக்குவிப்புத் திட்டம்

### பட்டினிக்கு எதிரான இயக்கம் செயற்படுத்தும்

மூளாய், ஜன 5

வலிகாமம் மேற்கில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்த மக்களுக்கென விசேட விவசாய ஊக்குவிப்புத் திட்டம் ஒன்றை பட்டினிக்கு எதிரான இயக்கம் ஆரம்பிக்க உள்ளது.

இநதத்திட்டத்தில்இணைத்துக் கொள்வதற்குத் தகுதியான விவசாயிகளைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிராமிய மட்டத்தில் தெரிவு செய்யப்படும் விவசாயிகளை வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபடுத்துவதற்கும் —

அவர்களுக்குத் தேவையான விவசாய உபகரணங்களை வழங்குவதற்கும் —

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-99)

## பச்சிலைப்பள்ளி வர்த்தகர்களின் கூட்டம்

பச்சிலைப்பள்ளி வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வடமராட்சியில் இயங்கும் பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

வர்த்தகர்களின் இழப்பீடு தொடர்பான இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட இருப்பதால் இழப்பீட்டுக் கோவையுடன் சமுகமளிக்குமாறு பச்சிலைப்பள்ளி இடம்பெயர்ந்தோர் நலன்புரிச்சங்கச் செயலாளர் அ. கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

வர்த்தக சங்கத்தில் பதிவு செய்யாத வர்த்தகர்களும்இக் கலந்துரையாடலில் பங்குபற்றித் தமது இழப்பீட்டு விவரங்களைச் சமர்ப்பிக்கலாம் என்று அவர் தெரிவித்துள்ளார். (உ-3)

## வருடாந்த திருவாசக விழா

கொழும்புத்துறை, ஜன. 5

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் வருடந் தோறும் நடத்தப்படும் திருவாசக விழா எதிர் வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் பேரவையின் தலைவர் தொழிலதிபர் சி. நாகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அருளுரை வழங்குவார்.

யாழ். இராமநாதன் நுண்கலைப்பீடம் நா. வி. மு. நவரெத்தினத்தின் ''தெய்வீக இன்னிசை'' பக்கவாத்திய சகிதம் நடைபெறும்.

வெற்றியீட்டிய மாணவர்களின் பண்ணிசையும், பரிசளிப்பும் இடம்பெறும். (ஐ-30)

## ஒளிவிழா

யாழ்ப்பாணம், ஜன. 5

இலங்கை மின்சாரசபைப் பட்டின் பணிமனையின் ஒளிவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இலங்கை மின்சாரசபை பணிமனையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக இலங்கை மின்சாரசபைப் பிரதிப் பொதுமுகாமையாளர் ஆர். முத்துரட்ணானந்தனும், சிறப்புவிருந்தினராக நீதி சமாதான ஆணைக்குழுத் தலைவர் அருட்தந்தை ஏ. ஐ. பேனார்ட்டும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-6)

## யுத்தத்தால் பாதிக்கப்பட்டோர் விவரம் தென்மராட்சியில் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 5

தென்மராட்சியில் இடம் பெற்ற யுத்தத்தின்போது காயமடைந்தவர்கள், ஊனமுற்றவர்கள், உயிரிழந்தவர்கள் ஆகியோரின் விவரங்களை சாவகச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி. என். ஜமுனாநந்தா சேகரிக்கவிருக்கின்றார்.

பாதிப்படைந்தவர்கள் தமது விவரங்களை இன்று முதல் குறிப்பிட்ட தினங்களில் குறிப்பிட்ட வைத்தியசாலைகளில் தம்மைச் சந்தித்து விவரங்களைப் பதியலாம் என அவர் தெரிவித்துள்ளார்

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் இன்று காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணிவரையும்—

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் நாளையும் எதிர்வரும் திங்கட்கிழமையும் நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 4 மணி வரையும்—

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் பிற்பகல் 3 மணி வரையும் — தம்மைச் சந்திக்கலாம் என்று அவர் அறிவித்துள்ளார்.

## திருவாசக முற்றோதல்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமூர்த்தி ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்குத் திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம்பெறும். (ம)

★ ★ ★

நாகர்கோயில் நாகதம்பிரான் நாகேஸ்வரப்பெருமான் கோயிலில் வருடந்தோறும் நடைபெறும் திருவாசக முற்றோதல் இம்முறை தென்புலோலி உபயகதிர்காமம் ஸ்ரீசக்கரசண்முகர் கோயிலில் நாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் வி.ப. வேலாயுதபிள்ளை தலைமையில்நடைபெறவுளது

## நாவற்குழியில் தங்கியிருந்த 6 பேர் அழைத்து வரப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜன. 5

நாவற்குழி மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள தென்மராட்சி மக்களில் இரு நோயாளிகள் உட்பட ஆறுபேர் நேற்றுஅங்கு சென்ற குழுவினரால் கோப்பாய்க்கு அழைத்து வரப்பட்டனர்.

கதிரன் ஞானசேகரம் (வயது 43), ஆ. நவரட்ணம் (வயது 50), திருமதி கனகசுந்தரம் பூலோகம் (வயது 51), கனகசுந்தரம் திலீபன் (வயது 15), திருமதி சிவானந்தம் பூரணம் (வயது 75), திருமதி முத்துக்குமார் லீலாவதி (வயது 72) ஆகியோரேநேற்று அழைத்துவரப்பட்டு இணுவிலில் வைத்து அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

தென்மராட்சியின் பல பகுதிகளிலும் இருந்து இடம்பெயர்ந்த 76 பேர் அங்குதங்க வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இவர்களில் 68 பேரின் விவரங்கள் 11 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன) (உ-5)

## தென்மராட்சி கிராம சேவையாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 5

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 60 கிராம சேவையாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு வரணி மகா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் இராணுவத்தின் 52 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி கலந்து கொள்வார்.

தென்மராட்சி நிலைமை தொடர்பாக இக்கூட்டத்தில் ஆராய விருப்பதால் கிராம சேவையாளர்களை தவறாது கலந்து கொள்ளும்படி தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை கேட்டுள்ளார். (உ-3)

## விபத்தில் பலி!

நெல்லியடி, ஜன. 5

டிராக்டர் — சைக்கிள் விபத்தில் சைக்கிளில் வந்த விறகு வியாபாரி தலை சிதறிப் பலியானார். அவரது 6 வயது மகன் தலையில் படுகாயம் அடைந்தார்.

இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3-30 மணியளவில் கரவெட்டி தில்லையம்பலப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் இடம்பெற்றது

மீசாலை வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து புத்தூரில் வசித்துவந்த க. செல்வராசா (வயது 38) என்பவரே பலியானார். இவரது மகனான செ. பிரகாஷ் (வயது 6) தலையில் படுகாயமடைந்து மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (உ-109-31-11)7

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 5

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வண். வடமேற்கு கிராம சேவையாளர் பகுதி சமுர்த்தி செயலணிக்குழு அமைக்கும் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வண். ஸ்ரீவைத்திலிங்க வித்தியாசாலையில் இடம் பெறும்.

இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் கலாநிதி க. குணராசா கலந்துகொள்வார். (உ-3-30)

★ ★ ★

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டக்கிளையான வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் வடமராட்சிக் கிளையின் கூட்டம் ஒன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10—00 மணிக்கு தேவரையாளி இந்துக்கல்லூரியில் இடம் பெறவிருக்கின்றது. (உ-3)

## விண்ணப்பங்கள் ஏற்பு

யாழ். செயலக மேலதிகப் பதிவாளர் பிறப்பு, இறப்பு, விவாகப் பணிமனையினால் கடந்த வருட இறுதியில் இடைநிறுத்தி வைக்கப்பட்ட பிறப்பு, இறப்பு, விவாக விண்ணப்பப்படிவங்கள் கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் மீண்டும் ஏற்கப்பட்டு வருவதாக மேலதிக மாவட்டப் பதிவாளர் ந சதாசிவஐயர் தெரிவித்துள்ளார். (ஐ-30)

## ஜெயந்தி விழா

அன்னை சாரதா தேவியின் ஜெயந்தி விழா இன்று வெள்ளிக் கிழமை காலை 10 மணிக்கு கொடிகாமம் இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் அதிபர் திருமதி சுரேந்திரநாதன் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா 'அன்னையின் வாழ்வும் பெண்களும்' என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றுவார். (ஐ-109)

# நாவற்குழியில் தங்கியுள்ள 68 பேரின் பெயர் விவரங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.5

தென்மராட்சியிலிருந்து இடம் பெயரமுடியாத நிலையில் நாவற்குழி மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ள 68 பேரின் விவரம் வருமாறு:-

இரட்ணசபாபதி சீதேவி (வயது 62), ஆறுமுகம் 'செல்லம்மா (வயது 72), நவரட்ணம் இராஜேஸ்வரி (வயது 47), ஆறுமுகம் நவரட்ணம் (வயது 50), நாகராசா சதாசிவ நந்தகுமாரன் (வயது 29), இரட்ணசாமி சண்முகராசா (வயது 52), சண்முகராசா லீலாவதி (வயது 49), முருகுப்பிள்ளை பரமசாமி (வயது 59), பரமசாமி நிமலாவதி (வயது 58), தில்லைநாதர் கோதைநாயகி (வயது 40), கோவிந்தர் தர்மலிங்கம் (வயது 68), நாகம்மா தர்மலிங்கம் (வயது 66), தம்பையா வைரமுத்து (வயது 51), ஆறுமுகம் சின்னத்தம்பி (வயது 83), சோமசுந்தரம் இரட்ணசபாபதி (வயது 72), சவிரிமுத்து ஆண்டி (வயது 67), வல்லிபுரம் முத்துவேலு (வயது 67), சிவபாக்கியம் முத்துவேலு (வயது 63), அமிர்தன் தனபாக்கியம் (வயது 76), பேரின்பதேவி குணபாக்கியம் (வயது 68), மேரிலூமி (வயது 31), முருகேசு தில்லைநாயகம் (வயது 56), வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் (வயது 22), கதிரவேலு நாகராசா (வயது 68), பொன்னம்பலம் பாவேசம் (வயது 69), இராசம்மா மாரிமுத்து (வயது 60), இராசையா கணபதி (வயது 48), தா. இரத்தினம் (வயது 49), வல்லிபுரம் வேலுப்பிள்ளை (வயது 78), வேலுப்பிள்ளை அன்னப்பிள்ளை(வயது 74), மேரி ஜோசப் (வயது 60), குமாரசாமி இராசேஸ்வரி (வயது 50), மாணிக்கம் தம்பையா (வயது 58), சுப்பிரமணியம் பசுபதி (வயது 45), சின்னத்தம்பி சிங்கம் (வயது 70), கந்தையா துரைராசா (வயது 58), கந்தையா சுப்பிரமணியம்(வயது 65), சுப்பிரமணியம் இராசம்மா(வயது 69), கந்தன் நாகி (வயது 49), செல்லன் செல்லம்மா (வயது 68), இளையவன் செல்லன் (வயது 72) இவர்கள் அனைவரும் கைதடி, நாவற்குழியைச் சேர்ந்தவர்கள்.

சரவணமுத்து குமாரசாமி (வயது 48), குமாரசாமி அருந்தவமலர் (வயது 38), கே.சுவந்தன் (வயது 8), கே.ஜீவகுமார் (வயது 9 - பொலீஸ் நிலைய வீதி, சாவகச்சேரி) அம்பலம் பத்மாவதி (வயது 25 - கைதடி, நுணாவில்), எஸ்.சிவராசா(வயது 46 - சாவகச்சேரி), கந்தையா சிவக்கொழுந்து (வயது 65- சாவகச்சேரி), கணபதிப்பிள்ளை மனோன்மணி (வயது 50 - சரசாலை வடக்கு), எஸ். சுந்தரேசு (வயது 68 - சாவகச்சேரி), சின்னத்தம்பி சின்னத்துரை (வயது 67 - பளை), இரட்ணசாமி கணேசன் (வயது 69, பொலீஸ் நிலைய வீதி, சாவகச்சேரி), எஸ்.ஜீவரட்ணம் (வயது 68 - நுணாவில்), லீலாவதி முத்துக்குமார் (வயது 72 - நுணாவில்), பி.ஜெயபாலன் (வயது 25 - நுணாவில்), சிவநாதன் பாக்கியம் (வயது 70 -சாவகச்சேரி), சின்னப்பா செல்வி (வயது 72-கைதடி வடக்கு), காப்பிலிப்பிள்ளை நாகசுந்தரம் (வயது 59 - தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி), இ.இராசேஸ்வரி (வயது 45),இ.காண்டீபன் (வயது 19), இ.காஜிந்தினி (வயது 18 - நுணாவில் கிழக்கு சாவகச்சேரி), காசித்தம்பி சரவணமுத்து (வயது 75 - சாவகச்சேரி), கதிர்காமு குமாரசாமி (வயது 70 - கல்வயல்), சிவானந்தம் பூரணம் (வயது 75 - வேரற்கேணி மட்டுவில்), இராஜரட்ணம் கமலாம்பிகை (வயது 57), இராஜரட்ணம் சிவதாசன் (வயது 32 - கல்வயல், சாவகச்சேரி), கனகசுந்தரம் திலீபன் (வயது 15), பூலோகம் கனகசுந்தரம் (வயது 51 - தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி).

(ம-5)

# சிறைகளில் உள்ள தமிழ்க் கைதிகள் சிலரை விடுவிக்க அரசு ஆலோசனை

## நல்லெண்ண நடவடிக்கையாக

கொழும்பு,ஜன.5

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்பாக - நல்லெண்ண நடவடிக்கையாக - பூஸா, களுத்துறைச் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்கள் சிலரை அரசு விடுதலை செய்யும் என்று 'லக்பிம' சிங்கள பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை அரசு விடுவிக்குமானால் தமது காவலில் உள்ள படையினரில் சிலரை விடுவிக்கத் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதாகவும் இதனை அடுத்தே கைதிகளை விடுவிக்க அரசு ஆலோசித்து வருவதாகவும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

(ஐ-20)

### சித்தமருத்துவ விரிவுரைகள் 22ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.5

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்களின் விரிவுரைகள் அனைத்தும் எதிர் வரும் 22ஆம் திகதியே ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய கல்வி ஆண்டுக்கான விரிவுரைகள் 8ஆம் திகதி ஆரம்பமாகும் என முன்னர் அறிவிக்கப்பட்ட போதும் தற்போது பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார். (ம-6)

### ஆஞ்சநேயர் சிலை எடுத்துவரப்படும்

வலி.வடக்கு,ஜன.5

மருதனார்மடத்தில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் ஆஞ்சநேயர் ஆலயத்துக்கான ஆஞ்சநேயர் சிலை இந்தியாவில் இருந்து கொழும்புக்கு எடுத்துவரப்பட்டுள்ளது.

அடுத்து யாழ்ப்பாணம் வரவிருக்கும் கப்பலில் இந்த உருவச் சிலையை எடுத்துவருவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆஞ்சநேயர் ஆலய நிர்மாண வேலைகளும் பூர்த்தி அடையும் நிலையை அடைந்துள்ளன.(ஐ-86)

### வீடு திருத்தக் கொடுப்பனவு

நவாலி,ஜன.5

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பல்வேறு அனர்த்தங்கள் காரணமாக சேதமடைந்த வீடுகளை திருத்தி அமைப்பதற்கென விண்ணப்பம் செய்தவர்களின் முதற்கட்ட கொடுப்பனவான பத்தாயிரம் ரூபா 814 குடும்பங்களுக்கு கிடைத்துள்ளது.

இவர்களுக்கான காசோலைகள் அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது வங்கிகளுக்குச் சென்று பணத்தை பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ம-100)

## [illegible] டக்ளஸுடன் சந்திப்பு

அரிய[illegible]லை,ஜன.5

யாழ்.மாவட்ட விவ[illegible] நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் [illegible] இயக்குநர் சபை உறுப்பி[illegible]க்கும் வடக்கின் புனர்வாழ்[illegible]மைப்பு அபிவிருத்தி அமை[illegible]ளஸ் தேவானந்தாவுக்கும் [illegible]மான சந்திப்பு யாழ்.ஸ்ர[illegible]பில் உள்ள ஈ.பி.டி.பி. [illegible]ல் நேற்றுமுன்தினம் [illegible]

சமாசத் தலை[illegible]வ ஞானம் தலைமை[illegible]க்குநர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் மற்றும் நிவாரண விநியோகம், நிவாரண விநியோகத்துக்கான சேவைக் கட்டணங்கள் உட்பட மற்றும் சில முக்கிய பிரச்சினைகள் தொடர்பாகவும் கூட்டத்தில் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

(இ-17)

**காங்கேசன்[illegible]ம் ஊடான கப்பல் சேவை**

## புலிக[illegible] அறிவிப்புக்கு ஈ.பி.டி[illegible] வரவேற்பு!

யாழ்ப்[illegible]ஜன.5

காங்கேசன்துறைக்[illegible] திருகோணமலைக்கும் இடையில பயணிகள் கப்பல் சேவை இடம்பெற விடுதலைப் புலிகள் சம்மதம் தெரிவித்துள்ளமை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம்.

இவ்வாறு ஈ.பி.டி.பி. நேற்று முன்தினம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிததுள்ளது. செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

செஞ்சிலுவை சர்வதேசக் குழுவினது வழித்துணையுடன் நடைபெற்று வந்த பயணிகள் கப்பல் சேவை காலநிலை சீர்கேட்டால் பருத்தித்துறை இறங்குதுறை ஊடாக நடைபெற முடியாமல் தடைப்பட்ட போது காங்கேசன்துறைத் துறைமுகத்தைப் பயன்படுத்த புலிகள் ஆரம்பத்திலேயே சம்மதம் தெரிவித்திருந்தால் பயணிகள் எதிர்நோக்கிய நெருக்கடி பெருமளவில் குறைந்திருக்கும்.

குடாநாட்டின் போக்குவரத்து வசதிகளில் ஏற்படுத்தப்படும் இடையூறுகள் இங்கு வாழும் மக்கள் மீது பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்துவதாகவே உள்ளன.

உள்ளூர் உற்பத்திகள் மற்றும் கடலுணவு வகைகளைச் சந்தைப் படுத்தல், நோயாளிகளுக்கான உடனடி சிகிச்சைக்கான பயண ஒழுங்குகள் போன்ற விடயங்கள் போக்குவரத்து தடை காரணமாகப் பாதிக்கப்படுகின்றன.

இது விடயம் தொடர்பாக நாம் பல தடவைகள் பல இடங்களில் எடுத்துரைத்து வந்துள்ளோம். அந்த வகையில் புலிகள் காங்கேசன் துறை முகத்தைப் பயன்படுத்த சம்மதம் தந்துள்ளமை குடாநாட்டு மக்களின் தேவையை ஓரளவுக்குப் பூர்த்தி செய்வதுடன், எமது முயற்சிக்குக் கிடைத்த வெற்றியும் ஆகும் - என்றுள்ளது.

(இ-6)

### கரப்பந்தாட்ட அணி தெரிவு

வலி.வடக்கு,ஜன.5

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட வீரர்கள், வீராங்கனைகளைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் பிரதேச செயலர் பிரிவுகளில் விளையாட்டு உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட அணியில் பங்குபற்ற விரும்புபவர்கள் உரிய விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் விளையாட்டு உத்தியோகத்தரிடம் கையளிக்கும்படி மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் சிறந்த கரப்பந்தாட்ட அணியை ஆண், பெண்களிடையே உருவாக்குவதற்காக இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

(ஐ-86)

# செய்திக் கொத்து

### நல்லூரில் தடகள விளையாட்டு

வலி.வடக்கு,ஜன.5

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையே நடத்தப்படவுள்ள தடகள விளையாட்டுப் போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி இன்றாகும்.

போட்டிகள் பற்றிய விவரங்கள் மற்றும் விண்ணப்படிவங்கள் யாவும் உரிய விளையாட்டுக் கழகங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

மேலதிக விவரங்களைப் பெற விரும்பும் விளையாட்டுக்கழகங்கள் நல்லூர் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் செ.மகிந்தனுடன் தொடர்பு கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-86)

### 'நிஜத்தின் நிழல்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா

வலி.வடக்கு,ஜன.5

திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் அவர்கள் எழுதிய 'நிஜத்தின் நிழல்' சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் யாழ். இலக்கிய வட்டத் தலைவரும் நல்லூர் பிரதேச செயலாளருமான கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்) தலைமையில் நடைபெறவுள்ளது.

வரவேற்புரையை யாழ். இலக்கிய வட்டச் செயலாளர் கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரையும் வாழ்த்துரையை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.சண்முகநாதனும் வெளியீட்டுரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் எஸ்.சிவலிங்கராசாவும் வழங்கவுள்ளனர்.

நூலின் முதற்பிரதியை முன்னாள் யாழ்.இந்துக் கல்லூரி அதிபரும், தொண்டமனாறு வெளிக்கள நிலையத் தலைவருமான சி.க.குகதாசனும், சிறப்புப் பிரதிகளை யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம், சிற்பி சிவ.சரவணபவன், திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் ஆகியோரும் பெறவுள்ளனர். (ஐ-86)

### பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

வலி.வடக்கு,ஜன.5

பெற்றோர்களை இழந்த மிகவும் வறுமையான குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பாடசாலை உபகரணங்களை வழங்கவுள்ளது.

நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சங்கத் தலைவர் ச. தனபாலசிங்கம் தலைமையில் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ள நிகழ்வில் இப்பொருள்கள் வழங்கப்படும்.

இவ்விழாவில் கௌரவ விருந்தினர்களாக வலி.வடக்கு பிரதேச செயலாளர் திருமதி ப.திலகநாயகம் போல், துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவி சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோரும் - சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராசாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-86)

### கட்டுத்துவக்கு வெடித்து சிறுவன் பலி

வவுனியா,ஜன.5

பெற்றோர் வீட்டில் இல்லாத நேரம் வீட்டில் இருந்த இடியன் கட்டுத்துவக்கை எடுத்து விளையாடிய சிறுவன் ஒருவன் அது வெடித்ததில் உயிரிழந்தான்.

முள்ளியவளை 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த யோகராசா நிலோஜன் (வயது - 7) என்ற சிறுவனே கட்டுத்துவக்கு வெடித்ததில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் போது உயிரிழந்ததாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

(ம-6)

### இந்து மகாசபை அமைப்பு

தென்மராட்சி,ஜன.5

வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள ஆலயங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்தவும், பூஜைகளின்றி மூடிக் காணப்படும் ஆலயங்களைப் புனரமைத்து அதன் செயற்பாடுகளை ஊக்குவிக்கவும், இந்து சமய வளர்ச்சிக்குத் தேவையான ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடவும் என வடமராட்சி இந்து மகாசபை கடந்த வெள்ளியன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச சபை மண்டபத்தில் சபை உப தலைவர் ப.இரவீந்திரன் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இந்து சமய அன்பர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்து சபையின் தலைவராக பருத்தித்துறை பிரதேச செயலரும், துணைத்தலைவர்களாக மருதங்கேணி, கரவெட்டி ஆகிய பகுதி பிரதேச செயலர்களும் காப்பாளர்களாக பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம முதல்வர், வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர், பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய பிரதேச சபைகளின் தலைவர்கள் ஆகியோர் பதவி வழியாக இப்பதவிகளில் செயல்பட வேண்டுமெனவும் சபையில் முடிவு செய்யப்பட்டது.

ஜனவரி நடுப்பகுதியில் மகா சபையின் பொதுக்கூட்டம் நடாத்தப்பட்டு நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாக சபையின் தலைவர் ஆ.சிவசுவாமி தெரிவித்தார். (ம-117-173)

### இராஜகோபுரம் அமைப்பு

வலி.வடக்கு,ஜன.5

25 லட்சம் ரூபா செலவில் நீர்வேலி அரசகேசரி பிள்ளையார் கோயிலுக்கான இராஜகோபுரம் அமைக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது.

ஆலயத் திருப்பணிச் சபையினர் அப்பகுதி மக்களின் நன்கொடையுடன் இப்பணியை மேற்கொண்டுள்ளனர்.

ஐந்து விமானங்கள் கொண்ட இந்த இராஜகோபுர வேலையில் இரண்டு விமான வேலைகள் பூர்த்தி அடையும் நிலையில் உள்ளன.

(ஐ-86)

### வீடியோ படக்காட்சி

யாழ்ப்பாணம்,ஜன.5

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக்காட்சித் தொடரில் சிங்கிதம் சீனிவாசராவின் 'ராஜபார்வை' எனும் திரைப்படம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் இடம் பெறும். ஆர்வலர்கள் யாவரும் கலந்து கொள்ளலாம் என பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (உ)

### பாதுகாப்பாக இருப்பதாக தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.5

கடந்த 19ஆம் திகதி நீர்வேலி வடக்கிலிருந்து காணாமற் போனதாகத் தெரிவிக்கப்பட்ட 15 வயது யுவதி அச்சுவேலி தம்பாலையிலுள்ள உறவினர் வீட்டில் பாதுகாப்பாக இருப்பதாக யுவதியின் தந்தையார் தெரிவித்துள்ளார்.

வல்லிபுரம் சுபீர்தா என்ற யுவதியே முன்னர் காணாமற் போனதாக அறிவிக்கப்பட்டு பின்னர் பாதுகாப்பாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

### விடுவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.5

யாழ்ப்பாணம் பலாலி வீதியிலுள்ள வீட்டில் வைத்து மூன்று தினங்களுக்கு முன் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் கடந்த திங்கட்கிழமை ஊரெழு முகாமில் வைத்து விடுதலை செய்யப்பட்டார்

கடந்த 29ஆம் திகதி கைது செய்யப்பட்ட இராசு இராசேந்திரம் என்பவரே விடுவிக்கப்பட்டவராவார். (உ-5)

# A/L 2003

**ஆரம்பம்:- 06.01.2001 (8.00 மணி)**

*கலைப் பிரிவு*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழ் | - | அருந்தவநாதன் | நாடகம் | - | குழந்தை |
| | | தர்மராஜா | வரலாறு | - | சின்னராசா |
| இ.நாகரிகம் | - | அருள்நங்கை | கிறிஸ்தவம் | - | ரங்கன். |
| புவியியல் | - | கந்தசாமி | ஆங்கிலம் | - | விஜயபாஸ்கர் |
| அளவையியல் | - | சர்மா | | | |

**விவரங்களுக்கு:-**

S.அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**

(82511) ஆரியகுளம் சந்தி - யாழ்.


# 90ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்

தாயின் மடியில் 15 - 02 - 1975



மண்ணின் மடியில் 08 - 10 - 2000

## செல்வன் பரமன் தவச்செல்வன்

கடந்த 08.10.2000 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது மகன் அமரர் பரமன் தவச்செல்வன் அவர்களின் மரணச் செய்தி கேட்டு எமக்கு வேண்டிய உதவிகளைச் செய்தவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு.

இன்று (05.01.2001) வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியையிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

*கரணவாய் மேற்கு,*
*கரவெட்டி.*

(c/14634)

# முதலாம் வருட நினைவுப் பூக்கள்

மண்ணில் 09 - 11 - 1945



விண்ணில் 19 - 12 - 1999

## திருமதி சரவணமுத்து பராசக்தி

(சரசாலை)

**திதி: சுவர்க்கவாயில் ஏகாதசி (05.01.2001)**

சீராண்ட செல்வத் திருவேயெம் தீங்கனியே!
சிறப்பா யெமையணைத்து வளர்த்திட்ட
பாராண்ட பண்பே பாசமுறு மம்மாவே!
பதறித் துடித்திட நாம் எங்குற்றீர்?
பேராண்ட பெற்றிப் பிறைசூடும் அண்ணலிடம்
பிறவா வரம்பெற்று நீர்சென்று
ஓராண் டகன்றதுவோ உம்நினைவு மறவாமல்
உத்தமன்தாள் அஞ்சலித்தோம் நாம்.

- அன்புக் கணவர்
பிள்ளைகள்.
(சரசாலை வடக்கு)
சாவகச்சேரி.

*தற்காலிக முகவரி:-*
*சந்தை வீதி,*
*ஆவரங்கால்.*

(82285)


கிறிஸ்ரல் சென்ரர்

நெல்லியடி

**Logic**

**S.R.J. சுதன்**

**DAY CLASS**

பகுதி II

ஆரம்பம்:- 07-01-2001

ஞாயிறு 7.00 a.m.

(82501)

**யங்றோயல்ஸ் சயன்ஸ் அக்கடமி**

நெல்லியடி

**A/L 2003**
**DAY CLASS**

பொருளியல - திரு. விக்கி
திரு. M.C.சுதாகரன்
கணக்கீடு - திரு. தவா
திரு. சத்தி
இந்துசமயம், இந்துநாகரிகம் } செல்வி சுதாமதி
அளவையியல் - திரு. தர்மதேவா
ஏனைய பாடங்களும்.

10-01-2001வரை
விண்ணப்பங்கள் ஏற்றுக்
கொள்ளப்படும்.

(82497)

*எமது ஒறியினல் சன் டிஜிரல் வெளியீடுகள்*

1. சுயம்வரம்
2. நாயகன்
3. சத்திரியன்
4. பிரம்மா
5. வான்மதி
6. புதிய பறவை
7. அலாவுதீனும் அற்புத விளக்கும்
8. கட்டளை
9. காதல் கோட்டை
10. 24 மணிநேரம்
11. எங்க ஊர் பாட்டுக்காரன்
12. சகலகலா வல்லவன்
13. நட்சத்திரப் போராட்டம்
14. அவ்வை சண்முகி
15. கீதாஞ்சலி
16. பாடு நிலாவே
17. பெரிய மருது
18. பவித்ரா
19. இளவரசன்
20. சிவன்
21. ப்ரியம்
22. தாய் மாமன்
23. ஜல்லிக்கட்டுக் காளை
24. கப்டன் பிரபாகரன்
25. முதல்க் குரல்

**அருண் வீடியோ மூவி**
நெல்லியடி.
Tele-070-212801 (82466)


# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

## செல்வன் பா. பாவலன்

பாஸ்கர் - வசந்தி தம்பதிகளின்
2ஆவது புதல்வன் செல்வன் பாவலன்

தனது முதலாவது பிறந்தநாளை தனது அப்பா, அம்மா, அண்ணா அகீஷன், அப்பம்மாவுடன் சுவிஸில் மிக விமர்சையாக இன்று (05-01-2001) வெள்ளிக்கிழமை கொண்டாடுகின்றார்.

**பாவலன் குட்டியை**

கைதடியைச் சேர்ந்த துரைசிங்கம் மாமா குடும்பம், சாவகச்சேரி டாக்டர் சின்னப்பு குடும்பம், கரவெட்டியைச் சேர்ந்த அம்மம்மா, தாத்தா, பெரியமாமா, சுதா குடும்பம், சித்தி ஆனந்தி, பாட்டி, அம்மம்மா, உடையார்கட்டு நிஷா மாமா குடும்பம் மற்றும் அனைவரும் பல்லாண்டு காலம் பல்கலையும் கற்று வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

*"வைரசோதி"*
*கரவெட்டி.*

**ந.சுதாகரன்.**

(82492)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**மண்ணில் ஜனனம்** 1918 - 03 - 08



**விண்ணில் ஐக்கியம்** 2000 - 12 - 06

## அமரர் P.ஆறுமுகராசா

(இரத்தினபுரி றபர், தேயிலை தொழிற்சாலை அதிகாரி)

**புன்னகை தவழும் பொன்முகமும்**
**இன்சொல் பேசும் பண்பழகும்**
**கண்ணியத்துடன் கடமையுணர்வும்**
**கொண்ட எங்கள் குலவிளக்கே**
**அன்பே உருவான உங்களை - இம்**
**மண்ணுலகில் வாழும் வரை மறப்பதுண்டோ?**
**மன்றிலாடும் இறைவனின் மலரடி சேர்ந்து**
**இன்ப வாழ்வில் நிலைத்திடப்**
**பிரார்த்திக்கின்றோம்.**

அன்னாரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் நேரிலும், தொலைபேசி, தந்தி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது இதயபூர்வ நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்,**
**சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.**

***T.C.**லேன்*
*மானிப்பாய்.*

(82166)


# பொருளியற் கல்லூரி

**A/L 2003** கலை, வர்த்தகப் பிரிவுகள்

**ஆரம்பம் :- நாளை மறுதினம் 07-1-2001 ஞாயிறு**

| பாடம் | நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | K.K.S.வீதி, இணுவில். |
|---|---|---|
| பொருளியல் | S. வரதராஜன் | S. வரதராஜன் |
| கணக்கீடு | B. முகுந்தன் | B. முகுந்தன் |
| வணிகக்கல்வி | V. முரளி | V. முரளி |
| அளவையியல் | R.P.சர்மா | R.P.சர்மா |
| தமிழ் | A. மீரா | N. பாலா |
| இந்துநாகரிகம் } இந்துசமயம் | P. ஜோதீஸ்வரன் | S. சுரேஸ் |
| நாடக அரங்கியல் | சுகந்தன் | J. சுதன் |
| புவியியல் | P. குமரன் | P. குமரன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | ரவீந்திரன் |
| அரசியல் | கியூபேட் | கியூபேட் |
| வரலாறு | வாகீசன் | வாகீசன் |

**இரு இடங்களில்**

யாழ்ப்பாணம் 9.00 a.m. இணுவில் 8.00 a.m.

அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(82476)

# மயானம் போல் காட்சியளிக்கும் கைதடி, நாவற்குழிப் பகுதிகள்

## அங்கு சென்று திரும்பிய ப.நோ.கூ.சங்கத் தலைவர் தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.5

கைதடி, நாவற்குழிப் பகுதிகளில் மதிப்பிட முடியாத அளவுக்கு மோசமான அழிவுகள் ஏற்பட்டுள்ளன என்று நேற்று நாவற்குழிப் பகுதிக்குச் சென்று திரும்பிய தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கத்தின் தலைவர் சி. சுப்பிரமணியம் உதயனுக்குத் தெரிவித்தார்.

நாவற்குழி மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு உலர் உணவு வழங்குவதற்கென தென்மராட்சி பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை தலைமையில் ப.நோ.கூ. சங்கத் தலைவர் சி. சுப்பிரமணியம், கிராம அலுவலர்களான சு.செல்வராசா, ஆ.நடராசா, ப.நோ.கூ. சங்கப் பணியாளர்களான எஸ்.நவரட்ணராஜா, கே.சர்மா ஆகியோரைக் கொண்ட குழுவினர் இராணுவத்தினரால் கோப்பாய் - கைதடி வீதியூடாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

ப.நோ.கூ.சங்கத்தின் தலைவர் சி.சுப்பிரமணியம் இது தொடர்பாக மேலும் கூறியதாவது:-

காலை 10 மணிக்கு கோப்பாய் பாலம் ஊடாக கைதடி, நாவற்குழிப் பகுதிக்கு லொறியொன்றில் அழைத்துச் செல்லப்பட்டோம்.

கோப்பாய் பாலம் மூன்று இடங்களில் உடைக்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. இவை குண்டு வெடிப்புககளினால் ஏற்பட்டவைகளாக இருக்கலாம். தகர்ந்த இடங்கள் மண்போட்டு வாகனப் போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் சீர்செய்யப்பட்டுள்ளன.

கைதடிக்குள் நுழைந்த போது இருமருங்கிலுமுள்ள கட்டடங்கள் சேதமடைந்து இருந்ததை அவதானித்தோம். கைதடிச் சந்தியில் கட்டடங்கள் பல சேதமடைந்த அப்பகுதி மயானம் போல் இருந்தது. கைதடி ப.நோ.கூ. சங்கக் கட்டடம், தபாலகம், ஆயுள்வேத ஆஸ்பத்திரி, சித்த மருத்துவ பீடம், சைவச் சிறுவர் இல்லம் போன்றவற்றின் கட்டடங்கள் ஷெல் தாக்குதல்களினால் சேதமடைந்து காணப்பட்டன.

இத் தாக்குதல்களின் காரணமாக நாவற்குழிச் சந்தியிலும் மோசமான அழிவுகள் ஏற்பட்டுள்ளன.

கைதடி, நாவற்குழிப் பகுதிகளில் இரு மருங்கிலுமுள்ள வீட்டு வளவுகள் யாவும் பத்தைகள் வளர்ந்து காடு மண்டிக் கிடக்கின்றன.

கைதடியில் தேங்காய் ஒன்றின் விலை 2 ரூபாவாக இருக்கின்ற போதும் மரக்கறி, மண்ணெண்ணெய் தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் போன்றவற்றைப் பெறமுடியாதுள்ளது.

நாவற்குழியில் தங்கியுள்ளவர்களில் பலரும் தமக்கு வெற்றிலை, பாக்கு பெறமுடியாதிருப்பதாகக் கூறினார்கள்.

இங்கு தங்கியுள்ள மக்களின் நலன் கருதி தென்மராட்சி ப.நோ.கூ.சங்கத்தின் கிளை ஒன்றினை நாவற்குழியில் திறப்பதற்கு முடிவு செய்துள்ளோம்.

தென்மராட்சி மேற்கில் ப.நோ.கூ. சங்கத்திலிருந்து முக்கியமான சில கோவைகளை மட்டும் மீட்கக் கூடியதாக இருந்தது.

கைதடி-நாவற்குழி பிரதான வீதிகளில் மட்டுமே நாம் செல்ல முடிந்தது.

தற்பொழுது படையினர் நிலைகொண்டுள்ள இப் பிரதேசத்தில் இருக்ககூடிய வெடி பொருள்கள் துப்புரவு செய்யப்பட்ட பின்னரே மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படுவார்கள் என்று இங்குள்ள படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

-இப்படி அவர் கூறினார்

(உ-5-31-117))


## சரிநிகர் சந்தாதாரர்களுக்கு ஓர் அறிவித்தல்

தற்போது தபால் போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக சரிநிகர் சந்தாதாரர்களுக்குரிய பத்திரிகைகள் இங்கு வைத்தே தபாலில் சேர்க்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. எனவே சரிநிகர் பத்திரிகைககு சந்தா செலுத்தியோர் சந்தாப் பணம் செலுத்திய பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதியுடன் நேரிலோ தபால் மூலமோ கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

கனகா,
பத்திரிகை விற்பனை நிலையம்,
திருநெல்வேலி.

(C/14653)



## NEW SCIENCE COLLEGE

கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்.

❊ பௌதிகவியல் ❊

திரு.குகன B.Sc.

2002 A/L

❊ ஒளியியல் ❊

சனி, ஞாயிறு காலை 6.00 மணி

2003 A/L

சனி, ஞாயிறு காலை 7.00 மணி

2001 A/L Day class

❊ பொறியியல் ❊

செவ்வாய், வியாழன் காலை 9.00 மணி

ஆரம்பம்: 06-01-2001

(82564)



## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்தும் இ.க.நி.சேவை III க்கு ஆள்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

இடம் : யா/இந்துக் கல்லூரி
குமாரசுவாமி மண்டபம்

காலம் : 06-01-2001,07-01-2001,09-01-2001
காலை 9.30 மணி முதல்
2.30 மணி வரை

முதல் நாள் கருத்தரங்கை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை ஆகியோர் ஆரம்பித்து வைத்து விரிவுரை நடத்துவார்கள். தொடர்ந்து பல் துறை சார் அறிஞர்களினால் வழிகாட்டல் கருத்துரைகள் வழங்கப்படும். மாதிரி வினாப்பத்திரமும், கல்வித்துறை சார்ந்த புதிய தகவல்களும் பிரதி செய்து வழங்கப்படும்.

அனைவரும் கலந்து பயன் பெறுக!

த.பஞ்சலிங்கம்,
சி.து.பொ. செயலாளர்,
இ.த.ஆ.சங்கம்.

442,பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(C/14645)



### புலமைப்பரிசில் ~ 2001

21ஆவது பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெற்றோர்.

| | |
|---|---|
| க. கபீர்த்தனா<br>சுன்னாகம் நாகேஸ்வரி வித்தி. | 189 |
| வெ. ஜெயப்பிரசாந் யா/இ.ஆ.பா. | 177 |
| ந. திருத்தணிகன் யா/இ.ஆ.பா. | 176 |
| நி. ஜனலக்ஷன் யா/இ.ஆ.பா. | 171 |
| கு. லஜிந்தன் யா/இ.ஆ.பா. | 171 |

அடுத்த பரீட்சை 07.01.2001

எமதுநிறுவனத்திலும் சித்தன்கேணி கொம்ரெக்கிலும் நடைபெறும்.

BOND - யாழ்நகர்.

(82563)



### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

பிறிமா இன வெள்ளை பேட்டுக் குஞ்சுகள உடன் விற்பனைக்கு உண்டு. விலை குறைக்கப்பட்டுள்ளதை அறியத்தருகின்றோம்.

தம்பிப்பிள்ளையும் மைந்தரும்,
343, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (82565)



நாளை ஆரம்பம்!

கிரயக் கணக்கீடு

A/L 2001

கணக்கீடு D.SAM

பிரிவு I :- 7-8 } சனி
பிரிவு II :- 2-3 } ஞாயிறு

(825336)

DMI யாழ்நகர்


## ஆவணங்கள் மீட்பு

சாவகச்சேரி பிரதேசசபையின் சராலை உப அலுவலகம், பொதுநூல நிலையம் ஆகியவற்றின் உடமைகள் மற்றும் ஆவணங்கள் அண்மையில் மீட்கப்பட்டன.

உப அலுவலகம், பொது நூல் நிலையம் ஆகியவை இருந்த பகுதியில் பாதிப்பு எதுவும் இல்லை எனவும் ஆனால் அங்கிருந்து சில தளபாடங்களும், சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தின் கூரைத் தகடுகளும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அலுவலகத்திலிருந்த ஆவணங்களும் பொது நூல் நிலையத்திலிருந்த புத்தகங்களும் மற்றும் தளபாடங்கள் ஆவணங்கள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

உப அலுவலகப் பொறுப்பதிகாரி அல்பிரட் தலைமையில் ஒரு குழு யார்க்கரு வீதி வழியாக வாகனத்தில் சென்று பொருள்களை மீட்டு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

சரசாலை வடக்கிலிருந்து கனகன்புளியடி வரையுள்ள வீதியில் ஆறு வீடுகள் புல்டோசரினால் இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளதைக் காணமுடிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-117)


### அனுமதி அட்டை

புலமைப் பரிசில் போட்டிப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் யாவும் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்ப வைக்கப்பட்டுள்ளன.

முக்கிய குறிப்பு:
❊ அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் பரீட்சைத் தினத்தன்று (07.01.2001) நேரடியாகத் தம்மை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் யாழ். மத்திய கல்லூரிக்குச் சமுகம் தரவும்

இயக்குநர்,
IIS

100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (C/14652)



கண்டிக்குளியில் மீண்டும் I.B.S.

நேர சூசியை SAT., SUN., 9-12 a.m. பெறலாம். (82546)

தரம் 5 முதல் A/L வரை புதிய பிரிவுகள் 08.01.2001



பண்ணிசைப் பிரியர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!

### இதோ வெளிவந்துவிட்டது!

தேவாரப் பண்ணிசை

திருப்பள்ளியெழுச்சி - திருவெம்பாவை

### ஒலிப்பதிவு நாடா



இருபதாம் நூற்றாண்டில் ஈழத்தில் பண்ணிசையை வளர்த்த குறிப்பிடத்தக்கவர்களுள் ஒருவரும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் தேவார ஆசிரியருமான பண்ணிசை வள்ளல் தாவடியூர் எஸ்.இராசையா அவர்களின் மகனும் மாணவனுமாகிய

தேவார இசைமணி அருள் இசை அரசு தாவடியூர்
**திரு.கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன்** பாடியுள்ள
தேவாரப் பண்ணிசை, திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை
ஒலிப்பதிவு நாடாக்கள் வெளிவந்துள்ளன!

☛ தேவாரப் பண்ணிசை 3 CD களிலும் (3 ஒடியோ கசட்டிலும்)
திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை 2 ஓடியோ கசட்டிலும்
பெற்றுக்கொள்ளலாம்

கிடைக்கும் இடங்கள்:

கவிஞர் இ.குகதாசன்,
ஸ்ரீ திருப்பதி,
இல.(357)591, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
(நாவலர் சந்திக்கு அருகில்)

மு.க.திருலோகநாதன்,
ஸ்ரீ சக்தி விற்பனை நிலையம்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திரத்துச் சந்திக்கு அருகில்)

(82569)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி குமாரசாமி இராசம்மா

(மலாயன் பென்சனியர்)

இல.22,மல்லாகம் வீதி,சங்கானையை வசிப்பிடமாகக்கொண்ட திருமதி குமாரசாமி இராசம்மா நேற்று (04-01-2001) வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி குமாரசாமி (மலாயன் பென்சனியர்) யின் அன்பு மனைவியும் இரஞ்சிதமலர்,காலஞ்சென்ற குலசேகரம் மற்றும் குணசேகரம்(வர்த்தகவங்கி-யாழ்ப்பாணம்),அருந்ததி,வசந்தாதேவி,சாந்தாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் லயன் டாக்டர் வைத்திலிங்கம் தியாகராசா (உரிமையாளர்,மெடி எய்ட்ஸ் நிறுவனம்-நல்லூர்),மகேஸ்வரன்(சாரணியா தொலைத் தொடர்பகம், காசிப்பிள்ளை அன்சன்ஸ்-சங்கானை),கலோஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ரதிவதனி,நிட்வி,பிரசாந்தன்,ராம்,தர்ஷிகா,சரணியா, சைலஜா, நிரேஷ்,கோபி ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்

அன்னாரின் பூதவுடல் நேற்று (04-01-2001) வியாழன் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்ற இறுதிச் சடங்குகளின் பின்னர் சங்கானை வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்: கு.குணசேகரம்
(மகன்-வர்த்தகவங்கி-யாழ்ப்பாணம்),
லயன் டாக்டர் வை.தியாகராசா
(மெடி எய்ட்ஸ்-நல்லூர்)

(C/14654)

### வேலுப்பிள்ளை ஆனந்தவேல்

காரைநகர்,பலகாட்டைச் சேர்ந்த முருகேசு வேலுப்பிள்ளை (ஓய்வு பெற்ற கணக்காளர்-யாழ்.கச்சேரி),கமலாதேவி தம்பதியினரின் அருமைப் புதல்வன் ஆனந்தவேல் 02-01-2001 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் சரோஜினியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஜெயதேவி, அம்பிகாதேவி(ஆஸ்திரேலியா),கலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03-01-2001 அன்று கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மு. வேலுப்பிள்ளை,
39, அம்மன் வீதி,
வவுனியா.

(C/14650)

தகவல்:
தி.கந்தசாமி

## களுத்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குளியலறை ஒன்றில் வைத்தே இவர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் -

கழுத்து வெட்டப்பட்டே இவர் கொலை செய்யப்பட்டார் என்றும் -

கொலை செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்பட்ட அலுமினியத் தகடு ஒன்று தண்ணீரில் கழுவப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் -சிறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொலை செய்யப்பட்டவரின் அறையில் இருந்து தலையணை ஒன்றையும் அதிகாரிகள் கண்டெடுத்துள்ளனர். இந்தத் தலையணையால் சத்தம் வெளியே கேட்காதவாறு அவரது முகத்தை மூடிய பின்னர் கழுத்தை வெட்டி அவரைக் கொலை செய்திருக்கலாம் என்றும் அதிகாரிகள் மேலும் கூறினர்.

கொலை செய்யப்பட்ட பின்னர் அவரது சடலம் குளிப்பாட்டப்பட்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

சக கைதிகள் சிலரே இக்கொலையைச் செய்திருக்கக் கூடும் என்று சந்தேகம் தெரிவிக்கும் அதிகாரிகள் அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்ட போது அவர்கள் இது குறித்து மூச்சு விடவே மறுத்து வருவதாகவும் குறிப்பிட்டனர். இந்தச் சம்பவம் குறித்து சிறைச்சாலை அதிகாரிகளும் களுத்துறைப் பொலீஸாரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (உ-ம)

## நாடாளுமன்றுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்றும் கறுப்பு உடுப்பு அணிந்து, கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு சபைக்குச் சமுகம் தரவேண்டும்.

- இத்தகைய கோரிக்கை ஒன்றை முன் வைத்திருக்கின்றார் யாழ்.மாவட்டத்தின் ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன்.

யாழ்.மாவட்டத்தில் எமது சகோதரர்களுக்கு இத்தகைய கொடூரம் இழைக்கப்பட்டிருப்பது குறித்து சிங்கள தேசத்துக்கும், சிங்கள அரசுக்கும், சிங்கள மக்களுக்கும், சர்வதேச உலகுக்கும் அம்பலப்படுத்த வேண்டியது யாழ்மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் கடமையாகும். அந்த வகையில் 10 ஆம் திகதி கறுப்பு உடை, கொடியுடன் சபைக்குச் செல்லத் தீர்மானித்துள்ளேன். அதேபோன்று கறுப்பு உடையுடன், கறுப்புக் கொடி ஏந்தி வருமாறு யாழ்.மாவட்டத்தின் ஏனைய எம்.பிக்கள் அனைவரிடமும் தனித்தனியாகக் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளேன்" - என்று தெரிவித்தார் தி.மகேஸ்வரன் எம்.பி. (உ)

## புலிகளின் போர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்குப் பதிலளித்த போது எரிக் சொல்ஹெய்ம் வலியுறுத்தினார்.

புலிகளின் போர்நிறுத்த அறிவிப்பை வரவேற்ற அவர், போரில் ஈடுபடும் இரு தரப்புகளுக்கும் இடையில் இன்னமும் இடைவெளி காணப்படுவது குறித்துத் தாம் வருந்துவதாயும் சொன்னார்.

கொழும்புக்கான தனது பயணத் திகதியை வெளியிடுவது பொருத்தமற்றது என்று ரி.பி.ஸியின் செய்தியாளருக்குத் தெரிவித்த அவர் அதே வேளை வன்னிக்கு மீண்டும் சென்று புலிகளின் தலைவரைச் சந்திப்பதற்கான சாத்தியங்கள் அதிகம் இருப்பதாகவும், ஆனால் அதற்கான பயணத் திகதிகள் இன்னமும் முடிவு செய்யப்படவில்லை என்றும் கூறினார்.

இலங்கை விவகாரங்கள் குறித்துத் தாம் தொடர்ச்சியாக இந்தியாவுக்குத் தெரியப்படுத்தி வருவதாகக் கூறிய அவர், இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் இந்தியப் பங்களிப்பு வரவேற்கத்தக்கது என்றார்.

"தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும் என்று பிரித்தானிய இராஜாங்க அமைச்சர் பீற்றர் ஹெய்மன் கூறியிருப்பது குறித்து ரி.பி.ஸி. செய்தியாளர் கேள்வி எழுப்பினார்.

"அது பிரிட்டனின் கருத்து. ஒரு விசுவாசமான மூன்றாந் தரப்பு மத்தியஸ்தர் என்ற முறையில் இது விடயத்தில் நான் எதுவும் கூற முடியாது" - என்று பதிலளித்தார் அவர்.

தாம் ஒரு மத்தியஸ்தராக மாத்திரமே செயற்பட முடியும் என்பதை மீண்டும் வலியுறுத்திய எரிக் சொல்ஹெய்ம் முடிவுகள் போரில் ஈடுபடும் தரப்பினரால் மாத்திரமே எடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

வெளிநாட்டில் வாழும் தமிழர்களும் ஏனைய அனைத்து இன மக்களும், இலங்கையில் விரைவில் அமைதி திரும்ப வேண்டும் என்று பிரார்த்தனை செய்ய வேண்டும் என்றும் ரி.பி.ஸி. செய்தியாளர் பூ.சீவகனுக்கு வழங்கிய இந்தப் பேட்டியில் அவர் குறிப்பிட்டார். (உ-ம)

## பல்கலைக்கழக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளும் போதுதான் எமக்கு ஒரு தீர்வு - விடிவு - கிட்டும்" என்று தமது உரையில் அவர் குறிப்பிட்டார்.

"எந்த அமைப்பையோ, கட்சியையோ சாராமல், எமது மக்களின் நியாயமான உரிமைகளுக்காகக் குரல் எழுப்ப - அத்தகைய குரலை வெளிப்படுத்துவதற்கு ஆதரவாக செயற்பட - எமது சங்கம் பின்னிற்காது" - என்றும் அவர் கூறினார்.

மாணவர்கள் பிரதிநிதிகள் அங்கு உரையாற்றிய சமயம், "அஹிம்சை வழியில் நாம் எடுக்கும் நடவடிக்கைக்கு அனைத்துத் தமிழ்மக்களின் ஆதரவும் எமக்குக் கிடைக்கும்" - என்று நம்பிக்கை வெளியிட்டனர்.

பல்கலைக்கழக மாணவர்கள் குழுக்களாகப் பிரிந்து, சமுதாயத்தில பல்வேறு மட்டங்களிலும் கலந்துரையாடி இந்த எழுச்சி நிகழ்வுகளுக்கு ஆதரவைக் கோருவது என நேற்றுத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளில் மாணவர் பிரதிநிதிகள் நேற்று ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

"தமிழ்மக்களின் அபிலாசை சுயநிர்ணய உரிமை" என்று குறிப்பிட்டு யாழ்.பல்கலைக்கழகச் சமூகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரம் ஒன்றும் நேற்று விநியோகிக்கப்பட்டது.

"உடன் பிறப்பே" என்று விளித்து எழுதப்பட்ட அந்த துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எல்லோருடைய இதயத்தின் அதிர்வும் ஒலியும் ஒன்றாக இருந்ததனால் எங்கெங்கோ இருந்த நாங்கள் ஒன்றாக இணைந்து கொண்டோம்; கைகளை இறுகப் பற்றிக்கொண்டோம்; வலிமையின் உந்தலால் ஒவ்வொரு அடிகளாக எடுத்து வைக்கின்றோம். அப்போது உன் பாதங்கள் படும் வேதனைகளை நாங்களும் உணர்கின்றோம். அதற்காக நகர்ந்து செல்லும் உன் பாதங்களை நிறுத்தி விடாதே! எமது நாட்டின் மேல் பெரும் சுவராய் நாங்கள் இங்கிருப்பதற்காக எல்லாவற்றையும் தாங்கிக்கொள். உன்னருகில் இருப்போர் பலர்.

நீ சுமக்கும் சுமைகள் பெறுமதியானவை. உனது பணி புனிதமானது. முட்டி மோதி வலியற்று முனகும் ஒலிகளை உன் உடன் பிறப்புகளுடன் பகிர்ந்துகொள். சலிப்புகளும், நம்பிக்கையீனங்களும் உன்னை இயங்கவிடாது இழுத்துப் பிடிக்கலாம். ஆனாலும் உன் பாதங்களின் நகர்வை நிறுத்திவிடாதே!

என்றோ ஒரு நாள் நீ பதித்த பாதச் சுவடுகளின் பெறுமதியை இந்தத் தேசத்தின் வரலாறு நினைவு கொள்ளும்; சிரம் தாழ்த்தி நன்றி சொல்லும். இயலாமையும் நம்பிக்கையீனமும் தாண்டவமாடும் போது ஒருமுறை இதனை எடுத்துப் படி.

"உயர்ந்தவர்கள் நாமெல்லோரும்
உலகத் தாய் வயிற்று மைந்தர்
நசித்து இனிக் கிடக்க மாட்டோம்
நாமெல்லாம் நிமிர்ந்து நிற்போம்"

- என்றுள்ளது (உ)

## கண்டனம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலைக்கழக [illegible]வர்கள், யாழ்.பத்திரிகையாளர் [illegible]வரை இம்சைப் படுத்தியது ஏனோவெனக் கேட்க விரும்புகிறோம். 'பத்திரிகையாளனுக்கு கை, வாய் பூட்டுக்கள் போடாதே!', 'அவனின் எழுத்துச் சுதந்திரத்தில் கை வையாதே!' என முழக்கம் செய்த புத்திஜீவிகளே! இந்தப் பத்திரிகையாளனின் எழுத்துச் சுதந்திரத்தில் நீங்கள் தலையிட்டதைச் சரி என எவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

எனவே இனிமேலாவது இது போன்ற சம்பவங்கள் நடைபெறா வண்ணம் உறுதிப்படுத்தும்படி பல்கலைக்கழக சமூகத்தையும் பல்கலைக்கழக மாணவர்களின் பெற்றோர்களையும் எமது சங்கம் விநயத்துடன் வேண்டுகின்றது.

- என்றுள்ளது (உ)

## உதயன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமை விபரீதமடையலாம் எனக் கருதிய மாணவர்கள் இருவர் செய்தியாளரைக் கூட்டிச் சென்று பின் வாசலால் வெளியேற வழி செய்தனர். அவர் நடந்துவந்து கொண்டிருந்த போது இன்னொரு மாணவர் ரயரில் 'வால்வ்' கழற்றப்பட்டு காற்றுத் திறந்து விடப்பட்ட நிலையில் இருந்த அவரது சைக்கிளை உருட்டி வந்து அவரிடம் ஒப்படைத்தார்.

"ராகிங்"கில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் விஞ்ஞானபீட மாணவர்கள் நால்வர் இடைநிறுத்தப்பட்டதை ஆட்சேபித்து அந்தப் பீட மாணவர்கள் கடந்த ஒருவார காலமாக வகுப்புகளைப் பகிஷ்கரித்து வருகிறார்கள். பகிஷ்கரிப்புக் குறித்த செய்திகளை 'உதயன்' விவரமாய் பிரசுரித்து வந்தது என்பதும் -

அதுவே இத் தாக்குதலுக்குக் காரணம் என்பதும் - குறிப்பிடத்தக்கது (உ)

## மேலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலத்த பாதுகாப்புடன் இவர்களை சிறைச்சாலை அதிகாரிகள் அழைத்து வந்தனர்.

ஈ.பி.டி.பி. முகாமில் தங்கியுள்ள சாட்சியான மகேஸ்வரனை பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் அழைத்து வந்திருந்தார்.

அங்கு இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் சிப்பாய்களான அப்புஹாமிலாகே புஷ்ப சமன்குமார, காமினி முனசிங்க ஆகியோரை சாட்சியான பொன்னுத்துரை மகேஸ்வரன் அடையாளம் காட்டினார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் மூன்று படையினர் அடையாளம் காட்டப்பட்டிருந்தனர்.

(உ-3-31-117-173)


### அவசர கலந்துரையாடல்

எமது நிறுவனத்தில் கல்விகற்கும் மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று காலை 11.00 மணிக்கு (SLT) எமது நிறுவனத்தில் இடம்பெற இருப்பதால் அனைவரும் தவறாது சமுகம் தரவும்.

**Director (Ad).**

IBMS

**No.701, K.K.S. Road, Jaffna.**
**Tele.: 021-3165** (C/14651)



நாளை ஆரம்பம்.......

சைன் கல்வி நிறுவனம், உடுவில்.

| | | |
|---|---|---|
| கணக்கீடு<br>திரு. முகுந்தன் | பொருளியல்<br>திரு. மோகன் | வணிகக்கல்வி<br>திரு. நந்தீஸ் |
| அளவையியல்<br>திரு. சயந்தன் | தமிழ்<br>திரு. மாவை லிங்கம் | நாடகமும் அரங்கியலும்<br>திரு. ரமேஸ் |
| இந்துநாகரிகம், இந்துசமயம்<br>திரு. சுரேஸ் | | |

ஆரம்பம்: நாளை (06.01.2001) சனி 8.00 a.m. (82532)



### NEW SCIENCE COLLEGE (JAFFNA)

இணைந்த கணிதம்
2002 (A/L) நிகழ்தகவு
ஆரம்பம்: 06.01.2001 சனி 8.00 a.m.
2001 (A/L) ஒருதள விசைகள்
ஆரம்பம்: 06.01.2001 சனி 10.00 a.m.
2001 (A/L) PAPER CLASS
செவ்., வியா., (6.30 a.m.) தினங்களில் நடைபெறுகின்றன.
A.பத்மநாதன் (82455)



நாளை ஆரம்பம்!
A/L 2003
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
காலை 8.00 மணி
DMI
யாழ்நகர். (81305)



LOGIC
R.P.சர்மா
A/L 2002
குறியீட்டு அளவையியல்
சனி - ஞாயிறு
1) பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம்.
2) பொருளியற் கல்லூரி
இணுவில்.
திங்கள் - வெள்ளி
3) BARATHY
சித்தன்கேணி.
அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும். (82338)



இன்று ஆரம்பம்!
A/L 2003
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானப் பிரிவுகள்.
காலை 7.30
SUBRA (14)
சித்தன்கேணி (82383)



தரம் 5
புலமைப்பரிசில் வகுப்பு
சனி - ஞாயிறு
நடைபெறுகின்றன.
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்
BARATHY
சித்தன்கேணி (82346)



SPOKEN ENGLISH WITH GRAMMAR
LECTURES BY:
Mr. M.A.HARI
புதிய பிரிவு ஆரம்பம்
07.01.2001 ஞாயிறு
மாலை 2.00 மணி
SATURDAY SUNDAY } 2 p.m. - 3 p.m.
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தியடி - யாழ்ப்பாணம். (82427)



### யாழ்.மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்கம்

### பரீட்சை பற்றிய அறிவித்தல்

மெய்வன்மைச் சட்ட விதிகளில் தேர்ச்சிபெற்ற தொழில்நுட்ப அதிகாரிகளைத் தெரிவுசெய்வதற்கும் மற்றும் தரம் உயர்த்துவதற்குமான பரீட்சைகளை ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வன்மைச் சங்கம் எதிர்வரும் பெப்ரவரி 10 ஆம் திகதி நடத்தவுள்ளது.

விண்ணப்ப முடிவு தினம்:- 10.01.2001

மேலதிக விவரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும் பெற விரும்புவோர் யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்கத் தலைவர் கப்டன் என். சோமசுந்தரத்துடன், "அருண் ஸ்போட்ஸ் ஸ்பொட், 348, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்" என்ற விலாசத்தில் அலுவலக நேரத்தில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு தினம் நீடிக்கப்படமாட்டாது என்று ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வன்மைச் சங்கத்தின் தொழில்நுட்பக் குழுச் சட்டங்கள் தெரிவித்திருப்பதைக் கவனத்தில் கொள்ளும்படி வேண்டுகிறோம்.

சண்.தயாளன்
செயலாளர்.

யா.மா.அ.மெ.சங்கம். (C/14655)



### மரண அறிவித்தல்

**அருட்செல்வி இமல்டா அந்தோனிப்பிள்ளை**
(தி.கு.)

சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்.திருக்குடும்ப சபையின் துறவியுமாகிய அருட்செல்வி இமல்டா அந்தோனிப்பிள்ளை அவர்கள் 04.01.2001 வியாழக்கிழமை மன்னார் திருக்குடும்ப இல்லத்தில் காலமாகிவிட்டார்.

இவரது பூதவுடல் நாளை (06.01.2001) சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு மன்னார் திருக்குடும்ப இல்லத்தில் இருந்து மன்னார் புனித செபஸ்தியர் பேராலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலி பூசையின் பின் நல்லடக்கம் செய்யப்படும்.

அன்றைய தினம் காலை 7.00 மணிக்கு யாழ்.திருக்குடும்ப மாகாண இல்லத்திலும் அவரது ஆன்ம சாந்திக்காக திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவ்வறிவித்தலை குருக்கள், துறவியர், உற்றார், உறவினர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
அருட்செல்வி அருள்
(திருக்குடும்ப மாகாண இல்லம், யாழ்ப்பாணம்.)

121, பிரதான வீதி.
யாழ்ப்பாணம். (C/14656)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.01.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.